] 1928௵ ... வ [பகுதி 2.

# னமோகினி.

ஆசிரியர்
ஆரணி. குப்புசாமி முதலியார்



பிரசுரகர்த்தர்
நா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலையம், சென்னை.

# ம... ாகினி

ஒ... சஞ்சிகை.

இதில் இனிய... வெளிவரும். நாவலு... ஒரு சஞ்சிகையை ... ந்தால், அது தமிழபி... குத் திருப்தி யளிக்கக் கூடிய... நக்குமென்று நமது "... போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி 1922ஆ பிப்ரவரிமீ 1உ முதல் ஆரம்பித்து நடத்தி வருகி... இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமா... ளுக் கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். ... போது மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரா... ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர் மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச் சோலையின் அற்புதக் கோலே" "கடற்கொள்ளைக்காரன்" என் நாவல்கள் முடிவுபெற்று இப்போது "இராஜாமணி அல்லது, அபூர்வ மர்மம்" என்ற நாவல் நடந்து வருகிறது. முடிவான நா... கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ளவேண்டும்; அ... றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன் றும் கிரௌன் 80-பக்கங் கொண்டது. அடியிற்கண்ட விலாசத் திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற் றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்சஞ்சி கைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தா லும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக் கப்படும்.

| | | |
|---|---|---|
| உள் நாட்டிற்கு வருஷ சந்தா | ரூ. | 2—8—0 |
| வெளி நாட்டிற்கு | ,, | 3—0—0 |

**இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.**

| | | | | |
|---|---|---|---|---|
| அமராவதி 2 பாகமும் | ரூ. | 4 | 0 | |
| பவளத்தீவு 2 பாகமும் | ரூ. | 3 | 0 | |
| ஞானசெல்வாம்பாள் 5 பாகமும் | ரூ. | 9 | 10 | 0 |
| அர்ஜுனஸிங், சுந்தர் | ,, | 0 | 2 | 0 |
| அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள் | | 1 | 12 | 0 |
| கற்பகச்சோலையின் அற்புதக்கோலே | ரூ. | 1 | 4 | 0 |
| கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும் | ,, | 3 | 4 | 0 |

## இன்பவாழ்க்கையின் இரகசியங்கள்.

கண்ணைக் கவரத்தக்க அநேக ஆப்டோன்படங்களுடன் 400-பக் கங்களுக்குமேல் அழகிய பெதர்வெயிட் பேபரில் சுத்தமான எழுத் தில் அச்சிடப்பட்டு அழகிய சீமை கலிகோ பைண்டு செய்யப்பட் டது. இதன் விலை ரூபா 2.

மனமோகினி சந்தாதாரர்களுக்கு (31-3-28) வரை ரூபா 1 8

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதா...

உ

# கடற் கொள்ளைக்காரன்.

(2-ம் பாகம்.)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 APR 1928
MADRAS

186523.

ஸ்ரீமான். ஆறணி-குப்புசாமி முதலியாரவர்களால்
எழுதப்பெற்று

சென்னை
ஆனந்தபோதினிப் பத்திராதிபர்
நா. முனிசாமி முதலியா ரவர்களால்
வெளியிடப்பெற்றது.

1928

[...ஜிஸ்டர்ட்]

[விலை ரூபா...

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
சென்னை-600 008

இப்புத்தகங்கள் துரைத்தனத்தாரால்
அங்கீகரிக்கப்பெற்றவை.

## மாணவர்க்குரிய புத்தகங்கள்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| கம்பராமாயண சங்கிரகம் ... | 2 | 0 |
| சதானந்தர் ... | 1 | 4 |
| ஜீவகன் ... | 1 | 0 |
| குசேலோபாக்கியானவசனம் | 1 | 0 |
| கர்ணன் சரிதை ... | 0 | 12 |
| ஸ்ரீ பீஷ்மவிஜயம் ... | 0 | 10 |
| வீரத்தன்மையுள்ள ஹிந்து மாது சிரோமணிகள் ... | 0 | 10 |
| கீர்த்திசிங்கன் ... | 0 | 7 |
| அரிச்சந்திரன் சரிதை ... | 0 | 8 |
| சகோதரவாஞ்சை ... | 0 | 7 |
| நீலக்கொடி ... | 0 | 5 |
| மணவாளன் ... | 0 | 3 |
| பரசுராமன் ... | 0 | 3 |
| தசாவதார மகிமை ... | 0 | 6 |
| சிசுபாலன் ... | 0 | 8 |
| சண்டோபாக்கியானம் ... | 0 | 6 |
| கருணாகரரும் சத்தியசீலரும் | 0 | 8 |
| சத்திய வசனி ... | 0 | 4 |
| அங்கதன் ... | 0 | 4 |
| நாலு மந்திரி கதை ... | 0 | 4 |
| விமலன் ... | 0 | 4 |
| கண்ணபிரான் ... | 0 | 4 |
| செய்யுட்பாடத் திரட்டு ... | 0 | 4 |
| சீமந்தனி ... | 0 | 8 |
| தக்கன் ... | 0 | 6 |
| மங்களேசுவரன் ... | 0 | 8 |
| நரிவிருத்தம் மூலமும் உரையும் | 0 | 4 |
| ஸ்ரீ பாலன் ... | 0 | 10 |
| உதயணன் ... | 0 | 8 |
| தசக்கிரீவன் ... | 0 | 14 |
| போஜசரித்திரம் ... | 0 | 5 |

ஆனந்தபோதினி ஆபீஸ்,
சௌகார்பேட்டை, மதராஸ்.

கப்பித்தான் தான் கூறியபடியே சமாதான நிபந்தனைகளைப்பற்றி ஒரு கடிதம் வரைந்தார். சேனாதிபதியும் கப்பித்தான் கருத்தடங்கிய ஒரு கடிதம் எழுதினார். இரண்டு கடிதங்களும் மேற்கண்ட ஏற்பாட்டின்படி ஆட்களிடம் கொடுத்தனுப்பப்பட்டன. அவர்கள் சென்று ஆறாவது நாள் திரும்பிவந்தார்கள். வேதபுரியரசன் தன் சேனாதிபதியின் கடிதத்தைக் கண்டபோது "எதிரிகள் மிக்க பலமானவர்களாக சாமார்த்தியமாய் நமது சைனியத்தைத் தோற்கடித்து விட்டிருக்கிறார்கள். இவர்களை நாம் ஜெயிப்பது ஆகாதகாரியம். நாம் வீணாக நமது துன்மந்திரிகளின் ஆலோசனையைக்கேட்டு இத்தகைய தோல்வி யடைய நேர்ந்ததோடு, நமக்கு அத்தீவிலிருந்து பாத்தியதையும் அடியோடு போய்விட நேர்ந்தது. இனியதைப்பற்றிச் சிந்திப்பதில் ஒரு பயனுமில்லை" என்று கருதி அந்தச் சமாதான நிபந்தனைகளின்படி எழுதவேண்டிய முறைமையில் ஒரு பத்திரம் எழுதி அதில் தன் கையொப்பமும், தன் பிரதான மந்திரிகளின் கையொப்பமும் இராஜாங்க முத்திரையும் வைத்து அனுப்பினார்.

அதைக் கண்டதே கப்பித்தானாகிய உத்தமநாதரும், குலசேகரனும் மிக்க சந்தோஷமடைந்தார்கள். அரசரிடம் சென்று வந்த உத்தியோகஸ்தர்கள் விவகாரம் திருப்தியாய் முடிந்த சந்தோஷத்தால் தின் பண்டங்களும் மதுபான வகைகளும் வழியில் சேகரம் செய்து கொண்டு வந்தார்கள். அவர்கள் வந்து சேர்ந்த தினம் கப்பலில் சந்தோஷமாய் விருந்து நடத்தப்பட்டது. மறுநாட்காலை கப்பற்படையிலுள்ள அனைவர்க்கும் விடுமுறை யளிக்கப்பட்டது. அவரவர்கள் கேளிக்கையாய்க் காலங்கழிப்பதற்கு வேண்டிய பொருள் அளிக்கப்பட்டது. அன்று நகர முழு

மையும் கொண்டாட்டம் நடத்தும்படி கட்டளையிடப் பட்டது.

ஆனல் நமது குலசேகரனும் அனந்தனும் எங்கிருக் கிறார்கள்? சாரங்கனுடைய ஹோட்டலாகிய சுகவிலாசத் திலும் அன்று பெரிய கேளிக்கையே. அன்று பகல் சுமார் ஒருமணியிருக்கும்; அப்போது சுகவிலாசத்திலுள்ள நில வறையில் குலசேகரன், சாரங்கன், அனந்தன், சாரங்கன் மனைவியாகிய எசோதை நால்வரும் மட்டும் ஒரு மேஜை யைச்சுற்றி யுட்கார்ந்துகொண் டிருக்கிறார்கள். மேஜை மேல் விலையுயர்ந்த குடிவகைகளும் தின்பண்டங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. நால்வரும் அவற்றை யருந்திக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்கள் முதலில் சாதாரணமாய் யுத்தத்தில் நடந்த சங்கதிகளைப்பற்றி சம்பாஷித்துக்கொண் டிருந் தார்கள்.

சாரங்கன் குலசேகரனை நோக்கி, "நண்பரே! நான் ஆதிமுதல் உமது பிரியப்படி நடந்து வந்திருக்கிறேன். இந்த யுத்தத்தில் நான் செய்த அற்ப உதவி தங்களுக்குத் தெரிந்ததே. ஒருவிஷயம் அதாவது சேனாதிபதிக்கு இங்கு யாரோ உளவிருந்திருக்கிறார்கள் என்று தெரிந்திருக்கிறது. அன்று என் ஹோட்டலிலிருந்த உத்தியோகஸ்தரில் ஒரு வன் என்னையும் நீங்கள் கட்டிவிட்டிருந்தாலும் என்னை யொருவாறு உற்றுநோக்கினான். அவன் பார்த்த பார்வை யால் அவன் என்மேல் பூரண சந்தேகம்கொண்டிருக்கிறான் என்று விளங்கிவிட்டது. இவர்கள் இப்போது பேசாமல்தா னிருப்பார்கள். நீங்கள் சென்றபின், உங்களுக்கு எவ் விதமாகவேனும் சொல்ப உதவிசெய்தவர்களுக்குக்கூடக் கொடுமையான தண்டனை விதிக்கப் பின்னிடையார்கள். உத்தியோகஸ்தர்கள் இங்கு தங்கியிருந்தார்கள். நீங்கள்

இந்த விடத்தை யறிந்து இங்கு வந்ததாலேயே நான் உங்களுக்கு உளவாக விருந்ததாக அவர்கள் சந்தேகங்கொண்டிருக்கிறார்கள் என்று நன்றாகத் தெரிகிறது. நானும் இந்த நான்கைந்து நாட்களாகக் கவனித்ததில் ஒவ்வொருவரும் என்னை யொருமாதிரியாக நோக்குகிறார்கள். இன்று அதை நன்றாகக்கவனித்தேன். முக்கியமாக ஒரு விஷயம். நான் இரண்டு மூன்று வீடுகளுக்கப்பாலுள்ள க்ஷவரகன் வீட்டின் முன் கூடத்தில் இருக்கையில், சமாதான உடன்படிக்கையைக் கொண்டுபோய் அரசன் சம்மதி பெற்றுத் திரும்பிவந்த உத்யோகஸ்தன் அங்கு வந்தான். நான் அவனைக்கண்டதும் எழுந்து வந்தன மளித்து மரியாதை செய்தேன். அவன் என்னை யுற்று நோக்கி,

"ஏன் சாரங்கம் பிள்ளை! யுத்தம் முடிந்து விட்டது, எதிரிகள் ஜெயமடைந்தார். அவர்களுக்கு உதவி செய்தவர்களுக் கெல்லாம் நல்ல சன்மானம் கிடைக்கும் என்பதிற்றடையில்லை" என்றான்.

அச்சமயம் க்ஷவரகன் என்னைக்குறிப்பாய் நோக்கினான். அவன் என் நண்பன். ஆகையால் பிற்பாடு நான் அவனை யதைப்பற்றிக் கேட்டபோது அவன் இரகசியமாய் என்னை நோக்கி "நண்பனே! நான் என் உயிருக்குத் துணிந்து உனக்குக் கூறுகிறேன். நமது சைனிய ஆட்களெல்லாம் நீ எதிரிகளுக்கு உளவாக விருந்ததாகப் பேசிக் கொண்டார்கள்" என்றான். ஆகையால் நான் இங்கிருப்பது பிராணபத்தே. நான் என்ன கதியாவதோ தெரியவில்லை" என்றான்.

## 75-வது அத்தியாயம்.

சாரங்கன் வார்த்தைகள் யாவும் கேட்ட குலசேகரன் அவனை நோக்கி "நண்பனே! ஆதிமுதல் நீ எனக்குச் செய்த உதவிகளை நான் உள்ளளவும் மறக்கவில்லை. முன்புசெய்த உதவிகளென்றால் தெரிகிறதா? நான் முன் வேலையிலிருந்தபோது. அவற்றையே நான் மறக்கவில்லை. அவைபோக இச்சமயத்தில் நீ செய்த உதவிக்கு எங்கள் அரசரே உனக்குப் பரிசளிக்கவேண்டியவர். பிரத்தியட்சத்தில் கண்ட எங்களுக்கு நீ செய்த உதவி யெத்தகையதெனத் தெரியும்.

இது மட்டுமல்ல. இப்போது நீ கூறிய சங்கதிகளனைத்தும் என் வேவு ஆட்களால் நான் தெரிந்துகொண்டிருக்கிறேன். உனக்கு நேரிடக்கூடிய ஆபத்தைப்பற்றி யுனக்கெவ்வளவு தெரியுமோ அதைவிட எனக்கு அதிகமாகத் தெரியும். ஆகையால் உன் விஷயத்தைப்பற்றி நான் முன்னமே யொருவித ஏற்பாடு செய்திருக்கிறேன். அதாவது, நீயும் உன் குடும்பமும் உங்கள் சொத்துக்களை யெடுத்துக்கொண்டு எங்கள்கூட வந்து விடுங்கள். நான் உனக்கு இந்திரபுரியில் ஒரு நேர்த்தியான ஹோட்டல் ஏற்பாடு செய்கிறேன். நீ யெங்களுக்குச் செய்த பேருதவிக்காக உனக்குத் தக்க பரிசளிக்கப்படும். நீ யதைக்கொண்டு விருத்திக்கு வந்து விடலாம். உன் அபிப்பிராயம் என்ன?" என்றான்.

சாரங்கன்:—"நண்பரே! எனக்கு இவ்வளவு உதவி செய்வதாயின் இதைவிட வேறென்ன வேண்டும். உங்களையே தெய்வமாக நினைப்போம" என்றான்.

குலசேகரன் "சரி, நீங்கள் உடனே புறப்பட ஆயத்தமாய் விடுங்கள்" என்று கூறி அவன் மனைவியை நோக்கி

"ஏனம்மா? உனக்கு நான் கூறிய ஏற்பாடு திருப்தியாக விருக்கிறதா?" என்முன்.

**ஏசோதை:**—"அண்ணு! ஆதிமுதலே நாங்கள் உன்னைப் பூரணமாய் நம்பியே எல்லாவிஷயங்களிலும், எங்களுக்கு என்ன ஆபத்து வந்தாலும் சரியென்று உன் கட்டளைப்படி நடந்து வந்தோம். இப்போதும் அதுவே. நீ எப்படிக் கட்டளையிடுகிருயோ அப்படியே நாங்கள் நடந்து கொள்கிறோம்" என்ருள்.

அதன்மேல் சாரங்கன் குடும்பத்தோடு தன் சொத்துக்களை யெல்லாம் எடுத்துக்கொண்டு குலசேகரன் கூடவே இந்திரபுரிக்கு வந்துவிட வேண்டிய தென்று தீர்மானிக்கப்பட்டது.

மூன்ருவது நாள் வேதபுரி சேனதிபதியும் மற்ற சிறையாட்களும் அங்கிருந்து தங்கள் ஊருக்குப் புறப்பட்டார்கள். இந்திரபுரிக் கப்பல் படையும் அன்றுகாலை பத்து மணிக்குப் பாறைத்துறையை விட்டுப் புறப்பட்டன. கப்பித்தான் இருக்கும் கப்பலிலேயே சாரங்கன் குடும்பத்திற்கு இடமளிக்கப்பட்டது. இவர்கள் நங்கூரம் தூக்கிப் பாய்விரித்ததும் காற்று அவர்களுக்கு அனுகூலமாக வீசியது. கால வித்தியாசப்படி எந்த சம்பவமும் அனுகூலமாகவோ பிரதி கூலமாகவோ நேரிடும். அதை மனித முயற்சியால் மாற்ற முடியாது.

மோக்ஷம் என்கின்ற பிறப்பிறப்பற்ற பேரின்ப நிலையை யடையவிரும்பும் ஒருவன் இவ்வுலக போகங்களிலும் பரலோகம் என்கிற மேல்உலக போகங்களிலும் உள்ள ஆசையை யொழித்து இரண்டிலும் விரக்தி (வெறுப்பு) அடைய வேண்டு மென்பது விதி. ஆனல் ஒரு மனிதன் தன் வாலிப காலமுதல் உலக போகங்களை யனுபவித்துக்கொண் டிருந்தாலும் தன் வயோதிக

காலத்திலேனும் மனப்பூர்வமான விரக்தி யடைவானேல் அவன் உயர்வான பதவியை யடைவான் என்று பிரபல சுருதிகள் கூறுகின்றன.

அதுபோலவே ஒரு மனிதன் பெரும் பாதகங்களைத் தன் வாலிப முதல் நெடுங்காலம் செய்திருந்தாலும், பிறகு ஒரு காலத்தில் தான் செய்தவையாவும் பாபகாரியங்கள் என்றுணர்ந்து அவற்றிற்காக மனஸ்தாபப்பட்டு அது முதலேனும் நற்காரியங்களைச் செய்யத் தொடங்குவானேல் அவன் ஈடேறுவான். நமது குலசேகரனே இதற்குத் திருட்டாந்தம். அவன் இதுகாறும் துர்க்கிருத்தியங்களையே செய்துகொண்டிருந்தாலும் ஒரு சீவகாருண்ய காரியத்தைச் செய்ததால் தன் அபாரமான குற்றங்களனைத்தும் மன்னிக்கப்பெற்றான். அதன் பிறகு நேர் வழியில் திரும்பி நல்ல விஷயத்தில் தன் புத்தி சாமார்த்தியத்தையும், நல்ல யோசனையையும் மனப்பூர்வமாய் உபயோகித்ததால் நல்ல கீர்த்தியும் செல்வாக்கும் செல்வமும் பெறப் போகிறான்.

* * * *

மேற்கண்ட சம்பவங்கள் நடந்து சுமார் ஒருமாத மாயிற்று. இந்திரபுரியில் வசந்த காலம். எங்கும் கேளிக்கைகளும், விளையாட்டுகளும், விருந்துகளும் நடந்துகொண்டிருக்கின்றன. வீதிகளிலெல்லாம் தோரணங்கள் பல வகையாகக் கட்டப்பட்டிருக்கின்றன வீடுகளிலெல்லாம் கொடிகள் பறக்க விட்டிருக்கின்றன. துரைத்தன உத்தியோகசாலைகளிலும், ஆஸ்தான மண்டபம். நகரமண்டபம் இத்தகைய விடங்களிலும் அரசருடையகொடி பறக்கவிடப் பட்டிருக்கின்றது ஜனங்களெல்லாம் விலையுயர்ந்த உடைகளையும் ஆபரணங்களையுமணிந்துகொண்டு கும்பு கும்பாய் வீதிகளின் வழியே சென்றுகொண் டிருக்கிறார்கள்.

இவர்களனைவரும் நகரமத்தியிலுள்ள பிரம்மாண்டமான மைதானத்தை நோக்கிச் செல்கிறார்கள். அம்மைதானத்தின் மத்தியில் அரசரது பெரிய கொடி பறந்துகொண்டிருக்கிறது. ஒருபுறம் சேனைகள் அணிவகுத்து நிறுத்தப்பட்டிருக்கின்றன. மற்றொருபுறம் பீரங்கிப் படையிருக்கிறது. அதிலிருக்கும் பீரங்கிகளைச் சில வீரர்கள் கெட்டித்துக்கொண்டிருக்கிறார்கள். மைதானத்தின் நாற்புறங்களிலும் நகரத்தின் பல பாகங்களிலிருந்து வரும் ஜனங்கள் நிறைந்து நிற்கிறார்கள். ஏராளமான வண்டிகள் வரிசை வரிசையாய் ஒழுங்காக நிறுத்தப்பட்டிருக்கின்றன.

அந்த நகரத்தில் என்ன விசேஷம்? அன்று அரசர் பிறந்த தினமாதலின் கொண்டாட்டம் நடக்கிறது. உத்தியோக சாலைகள் தொழிற்சாலைகள் யாவற்றுக்கும் விடுமுறை நாளாதலின் ஜனங்களெல்லாம் இஷ்டப்படி காலத்தைக் கழிக்க அனுகூலமாயிருக்கிறது. காலைப் பொழுதாகையால் இளஞ்சூரியன் அதிக தீட்சணியமின்றிப் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. குளிர்ந்த காற்று வீசிக்கொண்டிருக்கிறது. மணி சுமார் ஏழரையிருக்கும். அச்சமயம் ஜனங்களுக்குள் ஒரு சந்தோஷ ஆரவாரம் கிளம்பியது. அரசர் வாழ்க! நம் அரசர் நீடூழி வாழ்க! என்று எங்கும் கோஷ்டம் கிளம்பியது. அச்சமயம் அரசனும் அவருடைய மந்திரிப் பிரதானிகளும் மைதானத்தை நெருங்கி வருகிறார்கள். முன்னும் பின்னும் மெய்க்காப்பு வீரர்கள் காவலாய் வருகிறார்கள். அவர்கள் வரும் பெரிய செப்பனிட்ட பாதையின் இருபுறங்களிலும் பால் போல் வெள்ளையான உடையணிந்த போர்வீரர் வரிசையாய் நெருங்கி அசையாது நிற்பது சற்று தூரத்திலிருந்து பார்ப்பவர்களுக்கு நீண்ட வெள்ளைச் சுவர் இருப்பதுபோல் தோன்றியது.

அரசன் முதலியவர்கள் மைதானத்திருள் பிரவேசித்ததே அந்நகரமே அதிர்ந்து போகும்படி பீரங்கி வெடிகள் ஒன்றின்பின் ஒன்றாக டமீல் டமீல் என்று கிளம்பின. அரசன் முன்னும் மற்ற மந்திரி முதலியவர்கள் இரண்டடி பின்னால் சற்று தாழ்ந்த விடத்திலுமாக மைதானத்திலிருக்கும் கொடியின் பக்கலிருந்த அலங்காரம் செய்யப்பட்ட மேடைமேல் அமர்ந்தார்கள். உடனே சேனைகள் அணி அணியாய் அரசன் முன் சென்று மைதானத்தின் மறுபக்கம் போய்ச் சேர்ந்தார்கள். மற்றும் நடக்க வேண்டிய சடங்குகளும் நடந்தபின் அரசர் எழுந்தார்.

அரசர் எழுந்ததே அங்கு நடக்கவேண்டிய வேலைகள் முடிந்தனவென்று அடையாளம். ஆகையால் ஜனங்களெல்லாம் திரும்பத் தொடங்கினார்கள். ஜனங்கள் நெருங்கிய கூட்டங்களாகப் பல வீதிகளின் வழியே பிரிந்து செல்லும் காட்சி ஒரு பெரிய நீர் நிலையானது திடீலென்று இடம் பெயர்ந்து அனேகம் கால்வாய்களில் பாய்ந்து பலதிக்குகளிலும் செல்வதுபோல் தோன்றியது.

சிலர் வண்டிகளிற் சென்றுகொண் டிருந்தார்கள். அந்த வண்டிகளில் ஒரு வண்டியை மட்டும் நாம் பின் தொடர வேண்டியது நமது கதையின் தொடர்ச்சிக்கு அவசியமாகவிருக்கிறது. அது ஒரு இரண்டு குதிரைகள் பூட்டியவண்டி. அவ்வண்டி நகரத்தின் நாணயமான வடக்கு பாகத்தை நோக்கிச் சென்றது. அப்பாகத்தில்தான் செல்வம்பொருந்திய வர்த்தகர்கள், பிரதானமான இராஜாங்க உத்தியோகஸ்தர்கள், தொழிற்சாலைகளின் முதலாளிகள் முதலியவர்கள் வசிக்கிறார்கள். நகரத்திலுள்ள பிரதானமான கடைவீதிகள் அங்குதானிருக்கின்றன. நாணயமான ஹோட்டல்களும் அங்கேயே யிருக்கின்றன.

நாம் கூறிய அந்த வண்டி ஒரு அகன்ற பெரிய

வீதியிலுள்ள ஒரு ஹோட்டலின் முன் நின்றது. அது ஒரு மூன்றடுக்கு மாடிக்கட்டடம். அதன்முன் "புதுமாளிகை" என்று வரையப்பட்ட ஒரு பெரிய பலகை தொங்கவிடப் பட்டிருந்தது. அவ்வண்டியிலிருந்து நமது தைரியநாதம் பிள்ளையும், மீனாள், புனிதவதி, முருகப்பன், நாகம்மாள் ஐந்து பேரும் இறங்கி ஹோட்டலுக்குள் சென்றார்கள். அவர்கள் இரண்டாவதடுக்கு மாடியில் இருக்கும் ஒரு கூடத்தையும் மூன்றறைகளையும் வாடகைக்கமர்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்கள் சென்ற உடனே வேலைக்காரன் ஒரு தட்டில் அவர்களுக்கு வந்த கடிதங்களையும் தினசரிப்பத்திரிகைகளையும் வைத்துக்கொண்டு வந்து தைரியநாதர் முன் மேஜைமேல் வைத்தான். அவர் "காலைப் போஜனம் வட்டியுங்கள். அப்புறம் தபால்களைப்பார்ப்போம்" என்றார். அவ்வாறே அனைவருக்கும் போஜனம் வட்டிக்கப்பட்டது. யாவரும் போஜனம் செய்துகொண் டிருந்தபோது அன்றைய விஷயங்களைப்பற்றிச் சம்பாஷித்துக் கொண்டே போசனம் செய்தார்கள். மீனாள் "இப்போது அரசர் எங்கோ ஜெயமடைந்ததாய்க் கொண்டாடுகிறார்களே அதென்ன விஷயமோ தெரியவில்லை. "என்றாள்.

**புனிதவதி:**—நமது நாட்டரசர் வேறொரு நாட்டின்மேல் படையெடுத்துச் சென்று மிக்க ஆபூர்வமான விதமாய்ச் செயமடைந்ததாகவும், அதிலும் யாரோ ஒரு உத்தியோகஸ்தர் மிக்க சாமார்த்தியமும் வீரத் தன்மையும் காட்டியதாலேயே ஜெயம் கிடைத்ததாகவும் எங்கும் பேசிக் கொள்ளுகிறார்கள்.

**தைரியநாதர்:**—இன்று அந்த வீரருக்கு அரசன் விசேஷ பட்டமும் சன்மானமும் வழங்கப் போவதாய் நேற்றுப் பத்திரிகையில், "நித்திய துரைத்தன

சமாசாரம்" என்ற பத்திரிகையில் பார்த்தேன்.

மீனுள்:—அப்படிப்பட்ட வீரன் பெயர் வெளியிடப் பட்டிருக்குமே

தைரியநாதர்:—குழந்தாய்! அதுதான் எனக்கும் மற்ற அனைவர்க்கும் மிக்க வியப்பையளிக்கிறது. எனெனில் இத்தகைய சந்தர்ப்பத்தில் நமது அரசர்க்கு அத்தகைய உதவியை யுயிருக்குத் துணிந்து செய்த ஒரு சுத்த வீரனுடைய பெயரை என் முதலிலேயே வெளியிடலாகாது என்பது மிக்க வியப்பாயிருக்கிறது.

மீனுள்:—அந்த யுத்தத்திற்குச் சென்ற படைத்தலைவர்களில் ஒருவராகத்தானே அந்த வீரர் இருக்கவேண்டும். அச்சமயம் சென்றவர்கள் பெயர்கள் தெரியுமல்லவா? அது தெரிந்தால் அவர்களில் யார் அத்தகைய கௌரவத்திற்குரியவர்கள் என்று ஊகிக்கலாமல்லவா?

தைரியநாதர்:—அது உண்மையே. அந்த கப்பற்படைக்கு தலைவகித்துச்சென்றவர் கப்பித்தான் உத்தமநாதரே.

மீனுள்:—என்ன? கடற்கொள்ளைக்காரர்களை யெல்லாம் பிடித்துக்கொண்டு சென்ற அந்தக் கப்பித்தானு?

உத்தமநாதர்:—"ஆம். ஆம். குழந்தாய் இச்சம்பாஷணை கடைசியில் உன் மனதிற்கு வருத்தத்தை யுண்டாக்கக் கூடிய சங்கதிகளை நினைப்புண்டாக்கக் கூடிய நிலைமைக்கு வந்துவிட்டது. இச்சம்பாஷணையை யிதோடு நிறுத்தி விடுவோம்" என்றார்.

மீனுள் ஒன்றும் பேசவில்லை. அவள் மனதில் பல யோசனைகள் உதித்தன. எனெனில் அவளுக்குக் குலசேகரனிடமிருந்து வந்த இரகசியக் கடிதத்தால் அவன் கப்பித்தான் உத்தமநாதர்கூடத்தான், அவர் கப்பலில் ஒரு உத்யோகஸ்தனுகச் சென்றிருக்கிறுன் என்று அவள் அறிவாள். அதோடு அவனுடைய புத்திசாமார்த்தியமும்

தைரிய வீரத்தன்மையும், அவன் இனிமேல் தன் குணங்களை யெல்லாம் நல்வழியில் தன் தாய் நாட்டிற்கும் அரசனுக்கும் நன்மை யுண்டாக்கும் மார்க்கத்தில் உபயோகப்படுத்தத் தீர்மானித்திருப்பதையும் அவள் நன்கறிவாள். இவற்றால் ஒருசமயம் குலசேகரனே இத்தகைய பிரசித்தி பெற்றிருப்பானோ வென்று அவளுக்குள் பெரிய சந்தேகம் உண்டாகிவிட்டது.

புனிதவதி:—ஏனப்பா! இதுகாறும் அந்தச் சுத்த வீரரைப் பற்றி மறைத்து வைத்திருந்தாலும் இன்று அவருக்குப் பட்டம் முதலியவை யளிக்கப்படுவதால் இன்றேனும் அவரைப்பற்றி வெளியிடப்பட் டிருக்குமல்லவா?

தைரியநாதர்:—“ஆம் ஆம் வெகுவாய், என் கட்டாயமாய், வெளியிடப்பட்டே யிருக்கவேண்டும். ஆச்சு, போசனம் முடிந்து விட்டது. இன்றைய பத்திரிகைகளைப் பார்ப்போம்” என்றார்

சற்று நேரத்திற்குள் போஜனம் முடிந்தது. மீனாள் நாற்காலியிலுட்கார்ந்து ஆழ்ந்த சிந்தனையிலிருந்தாள். அவள் மனம் குலசேகரன் மேலேயே யிருந்தது. அந்தோ காதலின் வல்லமையை யென்னவென்று கூறுவது. அப்பா அது கொடிது கொடிது. அதிலும் உலக அனுபவமில்லாத வாலிப மாதிற்கும் வாலிப ஆடவனுக்கும் ஏற்படும் காதலுக்குக் கண்ணேயில்லை. சாதாரணமாகவே காதலுக்குக் கண்ணில்லை யென்பது பழமொழி. அப்படியிருக்கப் பூரணமாக அறிவு விளங்காத காலத்தில் ஏற்படும் காதலைப் பற்றி என்னென்று கூறுவது? மீனாளுக்கு முதலில் அவன் மேல் பூரணக்காதல் உண்டாகியிருந்தது. அவள் நன்னெறியும், கற்பும், உத்தமகுணமும் உடையவளானதால் அவன் முதலில் தன் தொழிலைப்பற்றிக் கூறியபோது அதைச்

சரியாக உணராமலிருந்தாலும், பிறகு கடற்கொள்ளைக் காரரால் தாங்கள் பிடிக்கப்பட்டபோது அனந்தன் குல சேகரனைப் பற்றிக் கூறிய சங்கதியால், அவனுடைய தொழில் எத்தகைய அக்கிரமமான தென்றும் அவன் ஈவிரக்கமற்ற கொடிய துர்க்குணமுடையவனயிருக்க வேண்டுமென்றும் அறிந்து கொண்டாள். அது முதல் அவன்மே லிருக்கும் காதலை யடியோடு மறந்துவிட வேண்டுமென்று தீர்மானித்தாள்.

ஆனல் அவள் சரியான கற்புடையவளானதால் "நமது மனம் எப்போது ஒருவன்மேல் நாடிவிட்டதோ அவனே நமக்குப் புருடன். இனி இன்னெருவனைக் காத லிப்பது பதிவிரதையின் தன்மையாகாது. ஆதலின் நாம் காதலித்த புருடன் இம்மாதிரியாய் இருப்பதாகத் தெரிந்த வரையில் நமது அமைப்பு இவ்வளவே யென்று தெரிகி றது. கடவுள் செயல் இப்படியாய் விட்டது. இனி நாம் உலகவாழ்க்கையின் சுகத்தை யிச்சிக்கலாகாது. நாம் ஒரு பெண் சந்நியாசியாகவே காலத்தைக் கழிக்க வேண்டும். இல்லறத்தில் கணவனேடு கூடிவாழ்ந்து அனுபவிக்கும் சுகத்திற்கும் சந்தோஷத்திற்கும் பதிலாக வயது முதிர்ந்த நமது தந்தைக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய் வதிலும், நமது சகோதரியின் நன்மையைக் கவனிப் பதிலும், இந்த வயோதிக மாதும் நமது சுற்றத்தாளு மாகிய நாகம்மாளின் கடைசிக்காலத்தில் அவளுக்கு வேண்டிய உபசாரங்களைச் செய்வதிலும் நமது சந்தோ ஷத்தை யடையலாம்" என்று தீர்மானித்துக் கொண் டாள். ஆனல் அவள் தன் எண்ணத்தை யொருவருக்கும் கூருமல் தன் மனதிற்குள்ளேயே வைத்துக்கொண்டாள். ஆயினும் அத்தீர்மானம் அவளுக்கு வியாகுலத்தையுண் டாக்காமலில்லை. ஒரு வாலிபப்பெண் தான் முதலில் ஒரு

வன்மேல் காதல் கொண்டு பிறகு அவன் தன் காதலுக்குப் பாத்திரவானல்லவென்று தெரிந்து அவன் எண்ணத்தை விட்டுவிட்டு, தன் கற்பைக் காத்துக்கொள்ளும் நிமித்தம் மற்றொருவனை மணம் புரியலாகாதென்றும், தன் வாழ் நாளின் சுகத்தையிழந்து விடுவதென்றும் துணிவது அற்ப காரியமல்ல. ஆதலின் நமது மீனாள் மிக்க உத்தமியென் றும் பதிவிரதையென்றும் கூறலாகும்.

யாவரும் போஜனம் செய்து முடிந்ததும் கூடத்தில் சென்று உட்கார்ந்தார்கள். தைரியநாதர் அங்கிருந்த மேஜையின் முன் நாற்காலியில் உட்கார்ந்து தபாலில் வந்த கடிதங்கள் பத்திரிகைகள் யாவற்றையும் நோக்கி முன்னே கடிதங்களைப் பிரித்துப் பார்த்துவிட்டுப் பிறகு, தினசரிப்பத்திரிகைகளில் இராஜாங்கப் பத்திரிகையை யெடுத்து வாசிக்கத்தொடங்கினார். அவர் முதல் பக்கத் தைப் பார்த்துவிட்டு இரண்டாவது பக்கத்தைப் பார்த்த தும் அவர் முகத்தில் ஒருவிதப் பிரகாசமுண்டாயிற்று. அவர் துரிதமாய் அங்குள்ள விஷயங்களை வாசிக்கத் தொடங்கினார். அப்பத்திரிகையில் பெரிய எழுத்தில் "நமது அரசரின் வெற்றி—அபூர்வ வீரத்தன்மை" என்று தலைப்பெயர் கொடுத்து அதன் கீழ் அடியிற் கண்ட விஷ யம் வரையப்பட்டிருந்தது.

"வடக்குத் தீவைப்பற்றி நமது அரசருக்கும் வேத புரியரசர்க்கும் கொஞ்சகாலமாகச் சில சச்சரவுகள் நிகழ்ந்துகொண் டிருந்ததைப்பற்றிப் பத்திரிகையின் வாயி லாய் நேயர்கள் அறிந்திருக்கலாகும். நமது அரசரின் பொறுமையும் கருணையும் யாவருமறிந்த விஷயமே. அத னால் வேதபுரியரசர் அச்சம்விட்டு நமது அரசரின் வல்ல மையை மிக்க அலட்சியமாகக் கருதிக்கொண்டார். அத் தீவின் கரையின் ஓர் பாகத்திலிருந்த அந்த அரசன் குடி

கள் நம்மரசரது எல்லைக்குள் புகுந்து கொள்ளையடித்தல், கால் நடைகளைக் களவாடிக்கொண்டு போதல் முதலிய துஷ்டகாரியங்களைச் செய்துகொண் டிருந்தார்கள்.

அதன்மேல் நமது அரசர் ஒரு கண்டிப்பான கடிதம் வரைந்தார். அதில் அத்தீவிலுள்ள தமது பாகத்திற்கு வேதபுரியரசர் ஒரு எல்லை குறிப்பிட்டுத் தமது குடிகள் அதைக் கடந்து வராதபடி திட்டம் செய்யவேண்டு மென்றும், அப்படிக் குறித்த காலத்திற்குள் செய்யாவிட்டால் அவர் நாட்டின்மேல் படையெடுக்கப் படுமென்றும் கூறப்பட்டிருந்தது. அந்த அரசர் தமது மந்திரிகளின் துர்ப்போதனையால் அந்த இறுதிக் கடிதத்தையும் இலட்சியம் செய்யவில்லை. அதுவரையில் பொறுத்த நம் அரசர் இன்னும் பொறுக்க நியாயமில்லை. ஆதலின் ஐயாயிரம் பேர் அடங்கிய ஒரு சேனையை யனுப்பினர். அச்சேனைக்கு பிரசித்திபெற்ற கப்பித்தானாகிய உத்தம நாதர் படைத்தலைவராக அனுப்பப்பட்டார். அச்சேனை பதின்மூன்று கப்பல்களில் சென்றன. அச்சேனையில் புதிதாய்ச் சிலர் அமர்த்தப்பட்டார்கள். அவர்களில் முன்பு வேறொருவித மான யுத்தக் கப்பலை நடத்திப் பழக்கம் வாய்ந்த கப்பித்தான் ஒருவர் இருந்தார். அவர் பெயர் வேறொரு வழியில் பிரசித்தி பெற்றிருந்தது.

நமது சேனை எதிரிகளின் துறமுகமாகிய பாறைத் துறையை நெருங்கியபோது எதிரிகள் பத்தாயிரம்பேர் இவர்களைக் கரையிறங்காதபடி தடுக்க ஆயத்தமாய் நின்றிருந்தார்கள். அவர்கள் மிக்க பலாட்டியர்கள். இரத்தப்பிரியர்கள். அவர்கள் மிக்க வீராவேசத்தோடு கரையில் பரவி நின்றார்கள். கப்பித்தானாகிய உத்தம நாதர் எவ்வாறு கரையிறங்குவதென்று ஆலோசித்தார். அச்சமயம் அவர் நாம்கூறிய புதிய ஆட்களில் முன்பு

கப்பித்தானுயிருந்த உத்தியோகஸ்தரோடு ஆலோசனை செய்யலானுர். நாம் இன்னமும் அவர் பெயரை மறைத்து வைத்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை. ஆனல் அவர் இறந்தகாலசரிதையவர்மேல் அகௌரவத்தை யுண்டாக்கக் கூடியதாகத் தோன்றுமாதலின் அதன் உண்மையையும் ஈண்டுகூறி அவர் அத்தகைய அகௌரவத்திற்குப் பாத்திர வானல்ல வென்பதை நிரூபிக்கவேண்டியது நியாயமெனத் தோன்றுகிறது.

அவர் வாலிப தசையில் தற்செயலாய்க் கடற்கொள்ளைக் காரரிடம் சிக்கிக்கொள்ள நேர்ந்தது. அச்சமயம் அவர் பயங்கர தோற்றமுடைய அந்தமுரடரைக்கண்டு அஞ்சாமல் தைரியத்தோடு தம்மைக் காப்பாற்றிக் கொள்ளத் துணிந்து உடைவாளைக் கொண்டே தனியாக அக்கள்ளர் கூட்டத்தில் பாய்ந்து போர் புரிந்தார். அவர் சற்றும் சளையாமல் கால்மணி நேரத்திற்குள் அவர்களில் நான்கைந்து பெயர்களைச் சங்கரித்ததோடு பலர்க்குக் காயங்களை யுண்டாக்கி வீழ்த்தி விட்டார். அக்கள்ளர்கள் உடனே யவரைக் கொன்றுவிட்டிருக்கலாகும். ஆனல் அவருடைய வீரத்தன்மையைக் கண்டதும் அத்தகைய ஆளைத் தமது கூட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று எண்ணினூர்கள். ஆகையால் அவரைக் கொல்லாமல் பிடித்துக் கொள்ள வேண்டுமென்று தீர்மானித்தார்கள். ஒருவன் அதிகம் பேரோடு எந்நேரம் சமாளிக்கமுடியும்? சற்று நேரத்திற்குள் அவர் பிடிக்கப்பட்டார்.

கள்ளர்கள் அவனைத் தங்கள் கூட்டத்தில் ஒருவனுகச் சேர்ந்து கொள்ளும்படி பலவந்தப் படுத்தினூர்கள். அப்போது அவர் என்ன செய்வது. பின்னல் சந்தர்ப்பம் பார்த்து தப்பித்துக் கொள்ளலா மென்று அச்சமயம் இணங்கிவிட்டார். பிறகு அக்கள்ளர் குணங்களை நன்கறிந்த

போது அவர் மனம் மிக்க வியாகுலமடைந்தது. ஏனெனில் அக்கள்ளர்கள் தங்களிடம் அகப்படுகிறவர்களைச் சற்றும் ஈவிரக்கமின்றி நடத்திக்கொண் டிருந்தார்கள். ஸ்திரீகளை யக்கிரமமாய் நடத்திக்கொண் டிருந்தார்கள். இவர் யோசனை செய்தார். நாம் கொஞ்சகாலம் இவர்களிட மிருந்தால் இவர்கள் அக்கிரமங்களையடக்கிக் கொஞ்ச மேனும் நன்மை புரியலாகுமென்று எண்ணினர்.

அதன்படியே அவர் அவர்களின் தலைவனாகிய கப்பித் தானாக ஏற்றுக் கொள்ளப்பட்டார். அக்கள்ளக் கப்பல் அமைப்பில் ஒரு யுத்தக்கப்பலே யெனலாகும். அதில் பீரங்கிகளும் இருந்தன. ஆட்களெல்லாம் ஆயுதம்தரித்த யுத்தவீரர்களே. அக்கப்பல் துரைத்தனத் தாருடைய யுத்தக்கப்பலை யெதிர்த்துப் போர் செய்துகொண்டிருந்தது என்றால் அதன் சக்தியைப்பற்றி நாம் விவரித்துக் கூற வேண்டியதில்லை.

அத்தகைய கப்பலை யந்த வாலிபர் மிக்க சாமார்த் தியத்தோடு எத்தகைய கொடிய காற்றிலும், நீரில் மறைந் திருக்கும் குன்றுகளுக்கும் மணல் திட்டுகளுக்கும் இடை யிலும் வழியறிந்து தந்திரமாய் நடத்துவதைக் கண்ட அக்கள்ளர் மிக்க வியப்படைந்தார்கள். அதுமுதல் அவர் களுக்குத் தங்கள் கப்பித்தானிடம் மிக்க அச்சமுண்டா யிற்று. ஆகையால் அவருக்கு அதிகமாய் இணங்கி நடக்கத் தொடங்கினர்கள். அதனால் அவர் அக்கள்ளர்கள் ஜனங் களுக்குச் செய்யும் அநீதங்களைத் தன்னால் கூடியவரையில் தன் உயிருக்குத் துணிந்தும் தடுத்து ஜனங்களுக்கு நன்மை புரியத்தொடங்கினர். புரிந்து கொண்டே வந்தார்.

கடைசியில் இரண்டு உயர்ந்த அந்தஸ்திலுள்ள ஒரு கவர்னரின் புத்திரிகளைக் கள்ளரின் அக்கிரமத்திலிருந்து காப்பாற்றினர். அந்தத் தருமச் செய்கையால் அவர்

பிராணபத்திலிருந்து மயிரிழையே தப்பினார். அப்படியும் கடைசியில் அந்த அக்கிரமஸ்தர்கள் அவருடைய தருமச்செய்கையால் தங்களுக்கு மிக்க நஷ்டம் நேர்ந்ததென்று யாவரும் ஒன்றுகூடி அந்த உத்தமரை யொரு ஜனசஞ்சாரமில்லாத பாழுந்தீவில் விட்டு விட்டார்கள். அவர் கடவுள் தயவால் அங்கு பட்டினியாய் மடியும் ஆபத்திலிருந்து தப்பித்திக்கொண்டார். நற்காலமாய் அவர் செய்த அந்த நல்ல காரியத்திற்காக துரைத்தனத்தார் அவரைப் பூரணமாய் மன்னித்து விட்டார்கள். அதன் பிறகே அவர் நமது படையில் ஒரு உத்தியோகஸ்தராக எடுத்துக் கொள்ளப்பட்டார். அவருடைய பூர்வ சரிதத்தைப்பற்றி நமது படைத்தலைவரான காப்டென் உத்தமநாதர் நன்குக அறிந்திருந்தார். ஆதலின் அவரே அந்த வீரனைப்பற்றி அரசரிடம் கூறி அவருக்குத் தமது கப்பலில் ஒரு உத்தியோகஸ்தர் பதவியளித்தார். அவர் பெயர் குலசேகரர்...."

---

## 76-வது அத்தியாயம்.

குலசேகரன் என்ற பெயரைக் கேட்டதே, மீனாள் மனம் என்ன நிலைமை யடைந்ததென்பதை நாம் சொல்ல முடியாது. அவளுக்குத் தன் மனக்கிளர்ச்சியை யடக்கமுடியவில்லை. ஆகையால் ஹா! என்றாள். தைரியநாதம் பிள்ளை யவளை யுற்று நோக்கினார். புனிதவதியும் முருகப்பனும்கூட அவளை யுற்றுநோக்கினார்கள். கடைசியில் தைரியநாதம் பிள்ளை பத்திரிகையில் உள்ள மற்ற சங்கதிகளை வாசிக்கத் தொடங்கினார்.

"கப்பித்தான் உத்தம நாதரும் குலசேகரனும்

ஆலோசனை செய்தபடி யுத்தத்தை நடத்தத் தொடங்கினர்கள். கப்பல்களிலிருந்த பீரங்கிகள் கரையிலிருக்கும் எதிரிகள்மேல் பிரயோகிக்கப்பட்டன. பதின்மூன்று கப்பல்களிலும் இருந்த பீரங்கிகளை யெல்லாம் உபயோகிக்கத் தொடங்கி குண்டுகளை மேக வருஷம் பொழிவதுபோல் பொழியத் தொடங்கினர்கள். அதனல் எதிரிகள் படபட வென்று கும்பு கும்பாய் மடிந்துவிடத் தொடங்கவே அவர்கள் கலங்கி நிலைகுலைந்து விட்டார்கள்.

அதேசமயம் குலசேகரன் படகுகளில் ஆட்களை யேற்றிக்கொண்டு பீரங்கிக் குண்டுகளின் கீழ் நுழைந்து துரிதமாய் கரையிறங்கி எதிரிகளைப் பக்கவாட்டில் தாக்கத் தொடங்கினர். எதிரிகளுக்கு எத்தனைபேர் விரோதிகள் வந்திருக்கிறார்களென்று தெரியாது. கடற்புறத்திலும் கரையிலும் இம்மாதிரி தாக்கப்படுவோமென்று அவர்கள் கனவிலும் கருதவில்லை. ஆகையால் உடனே குழப்பமடைந்து பின்னிடைந்து சிதறியோடத் தொடங்கினர்கள்.

குலசேகரன் அவர்கள் மறுபடி யொன்று சேர்ந்து திரும்பி வராவண்ணம் கலைந்து போகும் வரையில் துரத்திச் சென்றார். அதற்குள் ஏற்பாட்டின்படி அவர்கள் சேனை முழுமையும் கஷ்டமின்றி கரையி லிறங்கிவிட்டது.

எதிகரிகள் நான்கைந்து மைல்கள் தூரத்திலுள்ள நகரம்போய்ச் சேர்ந்தார்கள். அவர்கள் கலவரத்தோடு மறுநாள் காலை யுத்தத்திற்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்தார்கள். அங்கு அப்படியிருக்க காப்டென் உத்தமநாதர் குலசேகரருடைய சாமார்த்தியத்தைக் கண்டு மிக்க சந்தோஷமடைந்து பின்னல் நடக்கவேண்டிய விஷயத்தைப் பற்றியும் அவரோடு ஆலோசனை செய்தார். அவர்களுக்குக்குள் ஒருவிதத் தீர்மானம் செய்து கொண்டார்கள்.

எதிரிகள் தாங்கள் பாளைய மிறங்கு மிடத்தில் ஆலோசனை செய்துகொண்டிருந்து இரவு பதினேரு மணிக்கு நிம்மதியாய் நித்திரைசெய்யத் தொடங்கினர்கள். குலசேகரர் இரவு தொடங்கியதும் தன்னிடம் நம்பகமான ஒரு ஆளை மட்டும் அழைத்துக் கொண்டு தமது பாளையத்தை விட்டு வேவு பார்க்க எதிரிகளின் பாளையத்தை நோக்கிச் சென்ருர்.

இவர்கள் நகரத்தை நெருங்கியபோது நகரவோரத்தில் எதிரிகளின் வெளிக்காவலர் நால்வரிருந்தார்கள், குலசேகரர் தன் கூட்டாளியோடு பதுங்கிச்சென்று திடீலென்று அவர்கள்மேல் பாய்ந்து இரண்டொரு நிமிடங்களுக்குள் அவர்களில் இருவரை விண்ணுலகிற் குடிபுகச் செய்து மற்ற இருவரையும் சிறைப்படுத்தித் தங்களோடு கூடவே யழைத்துச் சென்றுபோகக் கருதினர்கள். ஆனல் அப்படிச் செய்வதால் தங்கள் காரியத்திற் கிடையூருகுமென வெண்ணி, அவர்களில் இருவருடைகளைக் கழற்றிக் கொண்டு உயிரோடிருக்கும் இருவரையும் தங்கள் சேனையிருக்குமிடத்திற் கருகிற் கொண்டுபோய் வெளிக்காவலரிடம் ஒப்பித்துவிட்டுத் திரும்பினர்கள்

இப்போது குலசேகரரும் அவர் துணைவனும் எதிரிகளின் இராணுவ உடையை யணிந்து கொண்டார்கள். அவற்றின் சட்டைச் சேபியொன்றில் ஒரு சிறு குறிப்புப் புத்தகமிருப்பதைக் குலசேகரன் பார்த்ததும் அதை நன்ருகச் சோதித்தார். அதில் அன்றைய குறிப்பு வார்த்தையிருந்ததைக் கண்டார். குறிப்பு வார்த்தை யெனில் இராணுவம் சண்டையிலிருக்கும் போதும் அரசர்கள் முதலியவர்களின் அரண்மனையிலும் உள்ளே எதிரிகள் முதலியவர்கள் வராதபடி ஜாக்கிரதையா யிருப்பதற்காகத் தங்களுக்குள் ஒரு குறிப்பு வார்த்தையை யேற்படுத்திக்

கொள்வார்கள். அது தினம் மாற்றப்படும். தங்கள் ஆட்களுக்கு மட்டுமேயது அறிவிக்கப்படும். அதை யறிவிப்பவர்களே யுள்ளே விடப்படுவார்கள்.

அதை யறிந்ததே குலசேகரர் மிக்க சந்தோஷமடைந்து தன் நண்பனோடு நகரத்திற்குள் பிரவேசித்தார். இவ்வாறு பிராணனுக்குத் துணிந்து எதிரிகளின் எல்லைக்குள் செல்பவர்கள் மிகச்சிலரே. குலசேகரர் நகருக்குள் நுழைந்து அங்கு எதிரிகளின் சேனாதிபதி தங்கியிருக்கும் இடத்தையும் மற்ற வுளவுகளையும் கண்டு கொண்டு அவர்கள் சேனை பாளையமிறங்கி யிருக்குமிடத்தையும் நன்றாய்ப் பார்த்துக்கொண்டு தன் நண்பனோடு திரும்பிவந்து தமது கப்பித்தானுக்கு எல்லா வுளவுகளையும் கூறி "எதிரிகள் சுமார் பத்தாயிரம்பேர் இருக்கிறார்கள். நாம் காலை வரையில் பேசாமலிருந்து விடிந்தபின் தாக்குவதாயின் அவர்களுக்குப் பூரண அவகாசம் கொடுத்ததாகும். ஆகையால் இப்போதே தாக்குவதே யுசிதம். மேலும் அவர்கள் சேனாதிபதி நகருக்குள் ஒரு வீட்டிலிருக்கிறார். சேனைகள் இப்போதடைந்த தோல்வியால் சோர்வடைந்திருப்பார்கள். விடிந்தபின் நாம் ஜெயிப்பது கஷ்டம்" என்றார்.

அவ்வாறே சேனைகள் மூன்று பிரிவாய் வகுக்கப்பட்டன. ஒரு பிரிவு கையிருப்பில் நகரின் பின்னால் வைக்கப் பட்டது. இரண்டு பிரிவுகள் எதிரிகளின் பாளையத்தை யேககாலத்தில் இரண்டு பக்கங்களில் தாக்கின. இதற்கிடையில் குலசேகரர் சில வீரர்களோடு சென்று ஒரு ஹோட்டலில் தங்கியிருந்த எதிரிச்சேனையைச்சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் ஏழெட்டுப் பேரையும் சேனாதிபதியையும் சிறையாக்கிக் கையிருப்புப் படைவசம் ஒப்பித்துவிட்டு யுத்தகளம் போய்ச் சேர்ந்தார்.

குலசேகரர் தன் வீரர்களோடு எதிரிகளின் மத்தியில்

நுழைந்து வீராவேசத்தோடு யுத்தம் புரிந்தார். திடீ லென்று இருபுறங்களிலும் தாக்கப்படவே எதிரிகள் மிக்க சேதத்தோடு யுத்ததளவாடங்கள் முதலிய யாவற்றையும் விட்டுவிட்டுச் சிதறியோடினார்கள். தங்கள் சேனாதிபதி சிறையாக்கப்பட்ட சங்கதியைக் கேட்டதே அவர்களுக்கு மனச் சோர்வும் திகிலுமுண்டாயின. நமது சேனைகளுக்கு தைரியமும் மிக்க உற்சாகமுமாயின. பொழுது விடிவதற்குள் நகரமுழுமையும் நமது சேனையின் கைவசமாயிற்று. குலசேகரருடைய இன்னொரு ஜீவகாருண்யச் செயல் கவனிக்கத்தக்கது. அவர் நமது சேனைகள் நகர ஜனங்களில் ஒருவருக்கேனும் எவ்விதத் தீங்கும் செய்ய வொட்டாது பாது காத்தார். பொழுது விடிந்ததும் நகரஜனங்கள் எப்போதும்போல் தந்தமது தொழில்களில் பிரவேசித்தார்கள் என்பதே யதற்குப் போதுமான அத்தாட்சியாகும்.

பூரணஜெயமடைந்த நமது படைத்தலைவரும் குலசேகரரும் ஆலோசனை செய்து எதிரியாகிய அரசருக்குத் தங்கள் நிபந்தனைகளைக் கடித மூலமாய்த் தெரிவித்து அவற்றை யவர் ஒப்புக்கொள்ளும்படிசெய்தார்கள். அந்தச் சமாதான உடன்படிக்கையால் சச்சரவிலிருந்த தீவு முழுமையும் நமது அரசருக்குச்சொந்தமாயிற்று. அதோடு இனி யுத்தம் நேரிடின், அதாவது யாரேனும் அன்னிய எதிரிகளோடு சண்டை நேர்வதாயின் ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்ள வேண்டுமென்றும் நிபந்தனைசெய்து கொள்ளப்பட்டது.

இத்தகைய ஜெயம் பெற்ற வீரர்கள் திரும்பிவந்தபோது நம்நகரஜனங்கள் மிக்க குதூகலத்தோடு அவர்களை வரவேற்றார்களென்பது அதிசயமல்ல. பிறகு அரசர் இச்செயத்திற்கு மூலகாரணர்களாகிய படைத்தலைவர்கள் அரண்

மனைக்கு வந்து தம்மைக் காணும்படி அறிவித்தார். அச்சமயந்தான் கப்பித்தானாகிய உத்தமநாதர் குலசேகரரை யரசருக்குக்காட்டி "அரசே! நான் அடைந்த ஜெயத்தின் புகழ்ச்சியனைத்தும் இந்தச் சுத்தவீரருக்கே உரியது. இவர் தனியே ஒரேயொரு துணையோடு நகரருக்குள் பிரவேசித்து எதிரிகளின் இருப்பிடம் முதலிய சகல உளவுகளையும் தெரிந்துகொண்டு வந்தார். அவருடைய அத்துணிகரமான செய்கையே எதிரிகளின் படைத்தலைவரைப் பிடித்துக் கொள்வதற்கும் அதன் மூலமாய்ப் பூரணமாய் ஜெயமடைவதற்கும் காரணமாயிற்று" என்று குலசேகரருடைய வீரத்தன்மையை விவரமாகக் கூறினார்.

குலசேகரர் கூர்மையான பிரகாசம் பொருந்திய நேத்திரங்களும் அகன்ற வசீகரமும் பொருந்திய வதனமும் ஆண்தன்மை பொருந்திய வனப்புவாய்ந்த அவயவங்களும் கம்பீரமான தோற்றமும் உடையவர். ஆகையால் நமது அரசர் அவர்முகத்தைக் கண்டபோதே அவர்மேல் விருப்பங்கொண்டார். பிறகு அவரைப்பற்றி கப்பித்தான் உத்தமநாதர் கூறிய வீரச்செயல்களையும், இராஜபக்தியையும், முன்பு பலவந்தத்தால் கள்ளரோடு சேர்ந்திருந்ததற்காக அவர்காட்டிய மனஸ்தாபத்தையும் கேட்டபோது அவர் விஷயத்தில் மிக்க விருப்பங்கொண்டு கப்பலை நடத்துவதில் அவருக்குள்ள அனுபவம் எவ்வாறு என்று வினவினர். கப்பித்தான் குலசேகரர் கள்ளக்கப்பலை நடத்திய அனுபவத்தால் அவ்விஷயத்தில் பூரண சாமார்த்தியம் பெற்றிருக்கிறார் என்று கூறினார்.

அதன்மேல் அரசன் குலசேகரருக்குப் பிரத்தியேகமாய் ஒருகப்பலை நடத்தும் கப்பித்தான் பதவியும், வீரபட்டமும், இலட்சம் ரூபாய் பரிசும் அளித்ததோடு, அவர் முன்பு கள்ளக்கப்பலில் சேர்ந்திருந்ததால் ஏதேனும்

அகௌரவ முள்ளாதாயினும் அது பூரணமாய்க் கழுவப் பட்டதென்றுகூறினர். இத்தகைய சுத்தவீரரை யவருடைய ஜீவ காருண்யத்திற்காகவும் அரிய செயல்களுக்காகவும் ஜனசமூகமே புகழ்ந்து சன்மானிக்க வேண்டியது கடமை யாகும். அவருக்கு இன்னும் மணம் முடியவில்லையென்று தெரிகிறது. அச் சுத்த வீரரை மணம்புரியும் உத்தமி மிக்க அதிர்ஷ்டமுடையவளா யிருக்கவேண்டும். கடவுள் நமது சுத்த வீரருக்கும் அவரை மணம்புரியும் பாக்கியசாலிக் கும் பூரண ஆயுளும் பதினறுபேறும் அளிக்குமாறு பிரார்த்திக்கின்றோம்."

பத்திரிகையிலுள்ள மேற்கண்ட விஷயங்களை வாசித்து முடிந்ததும், சற்று நேரம் ஒன்றும் தோன்றமல் பேசாம லிருந்தார். மீனுள் ஆழ்ந்த சிந்தனையிலிருந்தாள். முருகப் பனும் அவன் மனைவியாகிய புனிதவதியும் தங்களுக் குள் என்னவோ பேசிக்கொண்டிருந்தார்கள். நாகம்மாள் ஒரு பக்கம் நாற்காலியிலுட்கார்ந்து ஒன்றுமறியாதவள் போல் யாவும் கேட்டுக்கொண் டிருந்தாள். அவள் அவர் யாவும் வாசித்து முடிந்த சற்று நேரங்கழித்து தன் சுற்றத் தாராகிய தைரியநாதரை நோக்கி,

"இப்போது நீ வாசித்ததிலிருந்து என்ன நினைக் கிருய்? குலசேகரன் விஷயத்தில் உன் அபிப்பிராயம் இப்போதெப்படி யிருக்கிறது? குலசேகரன் என் புத் திரனே யென்றும், நமது முருகப்பனும் அவனும் ஒரே தந்தைக்குப் பிறந்தவர்களென்றும், ஆகையால் என் மைந் தன் முருகப்பனுக்கு அரைச்சகோதரனென்றும் பகிரங்க மாய் நமக்குள் தெரிந்துவிட் டிருக்கிறது. நடந்த சங்கதி கள் கெட்ட காலத்தால் எப்படி நேர்ந்திருந்தாலும் இப் போது முருகப்பன் குலசேகரனைத் தன் சகோதரனுக

ஏற்றுக்கொள்ளப் பின்னிடைய மாட்டானென்று நம்புகிறேன்...." என்றாள்.

அதைக்கேட்டதே முருகப்பன் "ஆம் எனக்கு ஒரு வித்தியாசமுமில்லை. நான் அவரை என் மூத்த சகோதரராக இப்போதே ஆலிங்கனம் செய்து கொள்ள ஆயத்தமாக விருக்கிறேன்" என்று மனப்பிரீதியோடு கூறினான்.

அதன்மேல் நாகம்மாள் தைரியநாதரை நோக்கி "சுற்றத்தாரே! இப்போது அரசரே என் புத்திரனைப் பூரணமாக மன்னித்ததோடு அவனுக்கு உத்யோகமும் பட்டமுமளித்து கௌரவப்படுத்தியு மிருக்கிறார். இப்போது நீ யுன் புத்திரியாகிய மீனாளை யென் புத்திரனுக்குக் கொடுக்க இனியும் ஆக்ஷேபனை யிருக்கிறதோ?" என்று வினவினாள்.

இதைக்கேட்ட தைரியநாதர் என்ன சொல்வதென்று தெரியாமல் மௌனமாக விருந்தார். மறுபடி எல்லா சந்தர்ப்பங்களையும் நோக்கி "கடவுள் கட்டளை யெப்படி யிருக்கிறதோ அப்படி நடக்கும். யாவும் ஒன்றாகக் கூடினால் நான் ஆக்ஷேபனை செய்யமாட்டேன்" என்றார். அச்சமயம் யாவர் நாட்டமும் மீனாள்மேல் வீழ்ந்தது. மீனாளோ இவர்களையும் இவர்கள் விஷயங்களையும் சற்றும் கவனிக்காதவள்போல் ஏதோ ஆலோசனையில் இருப்பவள்போல் தோன்றினாள்.

மீனாள் தான் முதலில் காதல் கொண்டவன் குணம் இத்தகையதென்று தெரிந்தபின் பிறகு எது எப்படியாயினும் இவனை மணம்புரியலாகாதென்றே தனக்குள் தீர்மானித்துக்கொண்டாள். ஏனெனில் அவள் இயற்கையில் கற்புடையவள். ஆனால் உலக அனுபவம் சற்றுமில்லாததால் குலசேகரனுடைய தொழில் இத்தகையதென அறியாமல் அவன் குணங்களை வீரத்தன்மையான நடக்கை

களென்று அவள் தவருக எண்ணிக் கொண்டாள். பிறகு தான் நேராய்க் கள்ளக்கப்பலையும் அதிலுள்ள ஆட்களையும் கண்டபோது அவள் உண்மையை யுணர்ந்தவளாய் இனி இத்தகைய ஆளை நாம் மணம் புரியலாகாதென்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டாள். இப்போது பத்திரிகையிலிருக்கும் சங்கதிகளைக் கேட்டபோது அவள் மனம் கலக்கமடைந்து விட்டது. பழைய காதல் மனதில் கிளம்பியது. அதனல் அவள் ஒன்றுங் கூறமுடியாமல் பேசாமலிருந்தாள்.

புனிதவதியும் அவள் கணவனும் இந்த விஷயத்தைப் பற்றி அன்றிரவு ஆலோசனை செய்தார்கள். முருகப்பன் தன் மனைவியை நோக்கி "என் அன்பே! உன் தமக்கையைப்பற்றிய இவ்விஷயம் உனக்கெப்படிப் புலப்படுகிறது? உன் தமக்கை குலசேகரனை மணம் புரிவது உனக்குத் தகுதியென்று தோன்றுகிறதா?" என்று வினவினன்.

புனிதவதி:—"என் தமக்கைக்கு இப்போது அவரை மணம் புரியப் பிரியமிருக்கிறதோ இல்லையோ? அதை யெப்படி நான் அறிவது" என்றுள்.

முரு:—உன் தமக்கைக்கு அவனை மணக்க விருப்பமிருப்பதாகவே வைத்துக்கொள்வோம். அப்போது உன் அபிப்பிராயமென்ன?

புனித:—இப்போது நாம் பத்திரிகையில் கண்ட சங்கதிகள் கூறுவதை நோக்க என் தமக்கை யவரை மணம் புரிவதில் குற்றமாவது அகௌரவமாவது இல்லையென்றே கருதுகிறேன். உமது அபிப்பிராயம் எப்படியோ. உண்மையில் தாங்கள் அவருடைய சகோதரராகவே யிருக்கிறீர்கள் என்று தெரிந்துவிட்டது.

முரு:—"நீ கூறுவது உண்மையே. என் சகோதரன் இயற்கையில் கெட்ட குணமுடையவரல்லவென்று இப்போது நன்ருகத் தெரிந்துவிட்டது. ஆகையால் உன்

தமக்கை யவரை மணம்புரிவது எனக்குச் சற்றும் ஆக்ஷேபனையில்லை. அதற்கு மாருக எனக்குத் திருப்தியே" என்ருன்.

---

## 77—வது அத்தியாயம்.

மறுநாட் காலை சுமார் எட்டுமணியிருக்கும். அச்சமயம் தைரியநாதர் இருக்கும் ஹோட்டலில் காலையாகாரம் வட்டிக்கப்படும் சமயம் தைரியநாதரும் அவர் புத்திரிகள், முருகப்பன், நாகம்மாள் அனைவரும் ஆயத்தமாய்த் தாங்கள் போசனம் செய்யும் அறையில் உட்கார்ந்திருக்கிருர்கள். அச்சமயம் வேலைக்காரன் வழக்கம்போல் தபால்களைக் கொண்டு வந்து கொடுத்தான்.

தைரியநாதர் தமக்கு வந்த கடிதங்களை யொவ்வொன்ருய்ப் பார்த்துக்கொண்டே போனபோது கடைசியில் ஒரு கடிதத்தைப் பிரித்துப் பார்த்ததும் அவர் முகத்தில் ஒருவிதப் பிரகாசம் உண்டாயிற்று. அவரை நோக்கிக்கொண்டிருந்த அனைவரும் அதைக் கவனித்தார்கள். அவரோ அக்கடிதத்தை முழுதும் ஒருமுறைக்கிருமுறை வாசித்தபின் அதை முருகப்பனிடமளித்து "இதை நீயே யாவருக்கும் வாசித்துக்காட்டு" என்ருர்.

முருகப்பன் அக்கடிதத்தை வாங்கிப் பின் கண்டபடி வாசிக்கத் தொடங்கினன்:—

"என் அன்பிற்கும் மரியாதைக்குமுரிய பெரியார்க்கு மிக்க வணக்கத்தோடு வரைந்து கொள்வது. தாங்களும் தங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் க்ஷேமமாகவே யிருப்பதையறிய மிக்க சந்தோஷத்தோடு கடவுளை யதற்காக வாழ்த்துகிறேன். என் சகோதரனுகிய முருகப்பன் தங்கள் இளைய குமாரத்தியாகிய புனிதவதியை மணம் செய்து

கொண்ட விஷயம் சில தினங்கட்கு முன்பே எனக்குத் தெரிந்தது. ஆனால் அச்சங்கதியைக் கேட்டதே யென் மனதிலுண்டான சந்தோஷம் கடவுளுக்கே தெரியும். ஆனால் என் தேகத்திலிருக்கும் அதே யிரத்தத்தையுடைய அவனுக்கு நான் செய்த தீங்கு என் மனதை யின்னும் கொடிய தீயிட்டு வாட்டுகிறது. அதை நினைக்கும்போ தெல்லாம் என் மனம் நரகவேதனை யடைகிறது. ஆனால் அச்சமயம் எனக்கும் முருகப்பனுக்கும் இருக்கும் நெருங்கிய சம்பந்தம் எனக்குச் சற்றும் தெரியாதென்பது ஒன்றே என் மனதிற்கு ஒருவித ஆறுதலையளித்துக்கொண் டிருக்கிறது. என்னைப்பற்றிய சங்கதிகளெல்லாம் இப்போது பத்திரிகைகளில் வெளி வந்திருப்பதால் அவற்றைப்பற்றி அறிந்துகொண்டே யிருப்பீர்கள்.

பத்திரிகைகளில் என்னைப்பற்றிக் கூறப்பட்ட விஷயங்களில் உண்மைக்கு அதிகம் கூறப்பட்டிருப்பினும் என் இயற்கைக்குணம் வரையில் குரூரமும் அக்கிரமுமானதல்ல. கொள்ளைக்காரர் கூட்டத்திலிருந்தபோது அவர்கள் ஜனங்களுக்குச் செய்யும் அக்கிரமச் செயல்களை, எனக்கு அவர்கள் மேலிருந்த அதிகாரத்தாலும் அவர்களுக்கு என்னிடமிருந்த அச்சத்தாலும், என்னால் கூடியவரைத் தடுப்பதையே நோக்கமாகக்கொண் டிருந்தேனென்பதும் ஒரு உயர்ந்த அந்தஸ்திலிருந்த பெரிய உத்தியோகஸ்தரின் இரண்டு புத்திரிகளை யத்துஷ்டரிடமிருந்து காப்பாற்றியதால் தான் நான் அவர்களால் ஒரு பாழுந் தீவில் விடப்பட்டேனென்பதும் உண்மையான விஷயங்களே.

பெரியாரே! நான் இப்போது இவ்வளவு எழுதுவதும் வேறெவ்வித எண்ணமும் கொண்டல்ல. கடைசி முறை நான் உங்களை விட்டுப் பிரிந்தது திருப்தியான மாதிரியாகவிருக்கவில்லை. ஆகையால் அடியேன் தெரிந்

தோ தெரியாமலோ தங்களுக்கு ஏதேனும் அபசாரம் செய்திருந்தால் அதற்காகப் பணிவோடு மன்னிப்புக்கேட்டுக்கொண்டு தங்கள் ஆசீர்வாதத்தைப் பெறவும், என் சகோதரனைச் சந்தித்தது அவனுக்கு ஒரு விஷயத்தில் இருக்கக்கூடிய தவருன அபிப்பிராயத்தை நீக்கிவிடக் கருதியுமே ஒருமுறை தங்களைக்காணும்படி அடியேனுக்கு அனுமதியளிக்கப் பிரார்த்திக்கிறேன். மேற்கண்டவற்றைத் தவிரக் கடவுளறிய என் மனதில் வேறெவ்வித நோக்கமுமில்லை என்று கடவுளறியக் கூறுகிறேன்.

என்றும் தங்களிடம் பணிவும் அன்புமுடைய
காப்டென் குலசேகரன்"

தைரியநாதர் இக்கடிதத்தைவாசித்ததும் பேசாமல் அதை மீனுளிடம் அளித்தார். அருகிலிருந்த நாகம்மாள் தைரியநாதரை நோக்கி "இக்கடிதம் என் புத்திரனிடமிருந்து வந்ததென்று என் மனதிற் படுகிறது" என்ருள். அவர் ஆம் என்றதே நாகம்மாள் மீனுளிடத்திலிருந்த கடிதத்தை வாங்கி கெட்டியாய் வாசித்தபின் தைரியநாதரை நோக்கி "அவன் வந்து நம்மைக் காண்பதில் உனக்கேதேனும் ஆக்ஷேபனையுண்டோ?" என்று கேட்டாள். அவர் உங்களுக்கெல்லாம் விருப்பமாயின் எனக்கு ஒரு ஆக்ஷேபனையுமில்லை. இப்போது அவனுடைய சரித்திரத்தைப்பற்றிய உண்மை நன்ருகத் தெரிந்தவரையில் அவன் நாம் கருதியபடி இயற்கையில் துர்நடக்கையுடையவனல்லவென்று தெரிந்துவிட்டது. மேலும் இவன் தந்தையாலேயே யிவன் அவ்வழியில் பிரவேசிக்கநேர்ந்தது. எப்படியாயினும் அரசன் அவன் விஷயத்தில் அன்புவைத்து அவனுடைய நடக்கைகளில் ஏதேனும் அகௌரவம் இருக்கும் பட்சத்தில் அது பூரணமாகக் கழுவப்பட்டதென்றுகூறி அவனுக்கு அன்போடு பட்டமும் சன்மானமும் அளித்திருக்கிறவரை

யில் இனி எவரும் அவனைக் கௌரவமாகவே நடத்தவேண்டிய கடமை யுடையவர்களா யிருக்கிறார்கள். அரசனே ஒருவனைக் கௌரவப்படுத்தும்போது அவன் அதற்குமுன் எத்தகையவனாக விருந்தாலும் அவன் கௌரவமுடையவனாகவே ஆகிவிடுகிறான். என்வரையில் இப்போது அவன் மீனாளை மணம்புரியவிரும்பி, மீனாளுக்கும் அதுசம்மதமாயின் சந்தோஷமாகவே இருவர்க்கும் திருமணம் நிறைவேறச் செய்வேன். ஏன் மீனாள்! குலசேகரன் இங்கு வருவதில் உனக்கேனும் உன் சகோதரிக்கேனும் ஆக்ஷேபனையில்லையே. முருகப்பன் தன் சகோதரனை ஏற்றுக்கொள்வதாய் முன்னமே கூறிவிட்டானாகையால் அவன் அபிப்பிராயம் நன்றாகத் தெரிந்தே யிருக்கிறது" என்றார்.

இரண்டு கன்னிகைகளும் ஏககாலத்தில் "என் தந்தைக்குச் சம்மதமான எதுவும் எனக்குச்சம்மதமே" என்றார்கள். இதையறிந்த நாகம்மாள் சந்தோஷ மிகுதியால் இரண்டு கன்னிகைகளையும் ஆலிங்கனம் செய்துகொண்டு ஆசீர்வதித்தாள். தைரியநாதர் உடனே குலசேகரனை மாலை மூன்று நான்குமணிக்கு வரும்படிக்கும் இரவு தங்களுடன் போசனம் செய்யச் சம்மதித்தால் தமக்கு மிக்க சந்தோஷமா யிருக்குமென்றும், பதில் தெரிவிக்கும்படிக்கும் ஒருகடிதம்வரைந்து ஆள்வசம் அனுப்பினார்.

* * * *

அதேதினம் மாலை சுமார் நான்கு மணியிருக்கும். இந்திரபுரியில் நீண்ட விசாலமான ஒரு வீதியில் ஒரு ஹோட்டலின் இரண்டாவது மாடியிலுள்ள ஒரு பெரிய அறையில் ஒரு மேஜையின் முன் இருவர் உட்கார்ந்திருக்கிறார்கள். அந்த அறை மிக நன்றாக அலங்கரிக்கப் பட்டிருக்கிறது. அதன் சுவரோரங்களிலெல்லாம் பட்டுத் திரைச் சீலைகள் தொங்கவிடப்பட் டிருக்கின்றன. அங்

குள்ள நாற்காலிகள் சோபாக்கள் யாவற்றிலும் பட்டு மெத்தைகள் வைத்துத் தைக்கப்பட்டிருக்கின்றன. மேஜை மேல் பளபளப்பான கம்பளி விரிக்கப்பட் டிருக்கிறது. வெள்ளிக் கிண்ணங்களும், ஒரு பெரிய வெள்ளித்தட்டில் மிட்டாய் வகைகளும், பழவகைகளும், உயர்தரச் சாராய வகைகளும் வைக்கப்பட் டிருக்கின்றன. வெள்ளி மணி யொன்று அந்த மேஜைமேல் வைக்கப்பட் டிருக்கிறது. அந்த ஹோட்டலுக்கு 'இராணுவ போஜனசாலை' யென்று பெயர். இராணுவத்திலுள்ள உத்தியோகஸ்தர்களே அதிகமாக அங்கு தங்குவது வழக்கம். அங்குள்ள மேஜை யின் எதிரில் உட்கார்ந்திருக்கும் இருவரும் நிதானமாய் ஒயின் சாராயம் அருந்திக்கொண்டும், சிற்றுண்டிகள் பழங் களைத் தின்றுகொண்டும் சந்தோஷமாய்ச் சம்பாஷித்துக் கொண்டிருக்கிறார்கள்.

நேயர்களே, அந்த இரண்டு ஆட்களும் யாரென்று நினைக்கிறீர்கள்? நமது குலசேகரனும் அனந்தனுமே. குலசேகரன் இப்போது வீரபட்டம் பெற்ற காப்டென் குலசேகரனாயிருக்கிறான். அதிலும் அரசரால் சன்மானிக் கப்பட்டவனாய் விட்டான். இப்போது நாடெங்கும் அவன் புகழ் வீசிக்கொண் டிருக்கிறது. பெரிய செல்வவந்தர்களும் அரசிரிடமுள்ள மந்திரி பிரதானிகள் முதலியோரும் அவனைக்காண வருகிறார்கள். அவன்உருவம் பத்திரிகை களிலெல்லாம் காணலாம். பிரபுக்கள் வீட்டில் நடக்கும் விருந்து கேளிக்கைகளுக்கெல்லாம் அவனுக்கு அழைப்புச் சீட்டு வருகிறது. அவன் உடைகளைப் பாதுகாக்க ஒரு வேலைக்காரனும் சிறுவேலைகளைச் செய்ய ஒரு ஆளும் இருக் கிறார்கள். அரசரது மாளிகையில் நடக்கும் விருந்து முதலிய வைகளுக்கே அவனுக்குத் தப்பாமல் அழைப்புச்சீட்டு வரு கிறது. அரசர் அச்சமயங்களில் அவனைக் கவனித்து நடத்

தும் மாதிரியைக்காண்போர் "குலசேகரன்மிக்க அதிர்ஷ்ட சாலி. கூடியசீக்கிரத்தில் மிக்க உயர்ந்த அந்தஸ்திற்கு வந்து விடுவான்" என்று கூறிக்கொள்கிறார்கள்.

குலசேகரன் இயற்கையில் கருணையும் சாந்தமுமே யுடையவன். இப்போது செல்வம் செல்வாக்கு அந்தஸ்து முதலியவை வந்துவிடவே, அவன் அற்பரைப்போல் அகங்காரமும் பெருமையும் அடைந்து விடவில்லை. அதற்கு மாறாக இன்னும் தாழ்மையும் அதிக பொறுமையும் யாரிடமும் வாஞ்சையும், கீழோரிடம் முக்கியமாய் இரக்கமும் மன்னிக்கும் குணமுமுடையவனாகி விட்டான். அவனிடம் முன்பு செயற்கை வாசனையாலுண்டாகி யிருந்த ஆத்திரமும் முரட்டுக்குணமும் இப்போது எங்கோ பறந்து போயின.

காப்டென் உத்தமநாதரிடம் மிக்க நன்றியுடையவனாகவும் வணக்கமுடையவனாகவும் ஆகி அவரைத் தந்தையைப்போல் கருதி மிக்க விசுவாசத்தோடு நடத்தத் தொடங்கினான். அவர் ஒருசமயம் அவனை நோக்கி "குலசேகரம்! நான் உன்னை என் கப்பலில் ஒரு உத்தியோகஸ்தனாகச் சேர்த்துக்கொண்டதற்கும் உன்னைப்பற்றி யரசரிடம் சிபாரிசு செய்ததற்கும் மிக்க சந்தோஷப்படுகிறேன். உன்னைப்பற்றி எவ்வளவு புகழ்ந்து கூறினும் தகும். வேறொருவன் இவ்வாறு என்போல் அந்தஸ்தும் அரசரிடம் அதிக செல்வாக்கும் பெற்று விட்டால் கொஞ்சமேனும் அகங்காரம் கொள்ளாமலிரான். நீயோ ஒரு விருக்ஷத்தில் பருத்த கனிகள் அதிகமாகவாக அதன் கிளைகள் எப்படித் தாழ்ந்து விடுகின்றனவோ அவ்வாறு அந்தஸ்தில் மேலேறவேற மிக்க தாழ்மையும் இனிய குணங்களுமுடையவனாகிறாய். கடவுள் உனக்கு இன்னும் அதிக மேலான பதவியும் புகழும் செல்வமுமளிப்பார்

என்பது நிச்சயம். இனி நீ என்னை யுன் மனமொத்த நண்பனாகவே கருது. உனக்காக நான் எத்தகைய உதவிசெய்யவும், என் பிராணனைக் கூடத் தத்தம் செய்யவும் சித்தமாயிருக்கிறேன்'' என்றார்.

அதற்குப் பதில் குலசேகரன் கூறிய மரியாதையும் நன்றியும் நிறைந்த மொழிகளால் அவர் கண்களில் ஆனந்த பாஷ்பம் வடிந்தது. குலசேகரன் தனக்கும் தைரியநாதர் குடும்பத்திற்கும் முன்பு இருந்த நட்பு முதலிய விஷயங்களையும் மீனுளுடைய அரிய குணங்களையும் கூறி "அந்த உத்தமி தான் ஒருவன்மேல் காதல் கொண்டு விட்டவரையில் இனி இச்சன்மத்தில் இன்னொருவரை மணம் புரிய மாட்டாள் என்பது திண்ணம். என்னால் அந்த உத்தமியின் ஆயுட் சுகம் அடியோடழிக்கப்பட்டது. நான் மற்ற விஷயங்களில் எவ்வளவு திருப்தியும் சந்தோஷமுமடைந்திருந்தாலும் இந்த ஒரு விஷயம் என் நினைவிற்கு வரும்போது என்னைவிட நரகவேதனையடையும் மனிதன் வேறெவனுமிரான்'' என்று கூறினன்.

உத்தமநாதர் "குலசேகரம்! கடவுள் பூரண கருணையுடையவர். அவர் எதையும் அறைகுறையாகச் செய்யார். உன் நற்குணத்திற்காக உன் நிலைமையில் இத்தகைய ஆச்சரியமான மாறுதலை யுண்டாக்கிய அவர் அந்தக் குறையையும் திருப்தி செய்யாதுவிடார். இது உண்மையென நம்பு'' என்றார்.

குலசேகரனுக்கு அந்த வேதனைமட்டும் மனதிலதிகமாகவே யிருந்தது. இப்போது அவனை மணம்புரியப் பெரிய பெரிய சீமான்களின் புத்திரிகளெல்லாம் போட்டி போட்டுக்கொண்டு வருவார்கள். அவர்களது தாய்மார்கள் அவர்களை யழைத்து வந்து வலிய இவனுக்கு அறிமுகமாக்கி வைப்பதோடு அவனுக்குப் பிரியமுண்டாகும்படி நடந்து கொள்ளுமாறு தம் பெண்களுக்குப் போதிப்பார்

கள். அவன் அரசரால் அதிகமாய் விரும்பப்படுவதால் எப்படியும் உயர்பதவிக்கு வருவான் என்பதே அவர்களைத் தூண்டும். அவர்களுடைய ஆசாரப்படி அத்தகைய நடக்கை அகௌரவமானதல்ல. ஆகையால் நமது குலசேகரனுக்கு இப்போது பெண்களுக்குக் குறையில்லை. ஆனால் மீனாளை யவள் குணங்களுக்கு மட்டுமே விரும்பினான். ஆகையால் தன் பொருட்டாகத் தன்னைக் காதலித்த அவள் வேறெ வனையும் மணம் செய்யக்கூடாதென்று தீர்மானித்திருக்கிற வரையில் தானும் அவளைத்தவிர இன்னொரு பெண்ணை விரும்பலாகாதென்று அவன் தனக்குள் உறுதியான தீர் மானம்கொண்டான். இத்தகைய உத்தமனுக்கும், சற்குண வதியாகிய கற்பரசிக்கும் ஆண்டவன் சகாயம் புரியாமற் போவானே!

குலசேகரனுக்குத்தான் கடைசியாகச் சிறையான சமயமுதல் அனந்தன்மேல் கோபமே. ஆயினும் அதை யப்போதே பொறுத்துக்கொண்டான்! ஆனால் அவன் செய்கையேதான் சிறைப்பட்டதற்குக் காரணமாகையாலும் இன்னும் தன்கூட விருந்த ஆட்களும் தன் கப்பலும் எதிரி களிடம் சிக்கியதற்கே அனந்தன் செய்கை காரணமான தாலும் அவன்மேல் வெறுப்புமட்டும் நீங்கவில்லை. அவ் வாறிருந்தும் பிரதான நீதிச்சபையில் விசாரணை நடந்த போது தன்னைப் பூரணமாக மன்னிப்பதற்குக் காரண மாக விருந்த அச்செய்கையில், அதாவது தான் தன்கூட விருந்த துஷ்டர்களிடமிருந்து அந்த இரண்டு கன்னிகை களையும் காப்பாற்றிய சந்தர்ப்பத்தில் அனந்தன் ஒருவனே தனக்கு உறுதியாக உயிருக்குத் துணிந்து உதவியாய் நின்றானென்றும், அவன் அப்படிச் செய்யாதிருந்தால் தான் அவர்களைக் காப்பாற்றியிருக்க முடியாதென்றும்,

ஆகையால் அந்தக் காரியத்திற்காகத் தனக்கு மன்னிப் பளிப்பதாயின் அவனுக்கும் பூரண மன்னிப்பளித் தாலன்றித் தான்மட்டும் மன்னிப்பை யேற்றுக்கொள்ள முடியாதென்றும் அது கடவுளுக்கே யொப்பாதென்றும் கூறினன்.

குலசேகரனுடைய உத்தமமான குணத்தை யறிந்த நியாயாதிபதிகள் அவன் விஷயத்தில் மிக்க மகிழ்ச்சி யடைந்து சந்தோஷமாய் இருவரையும் மன்னித்து விட்டார்கள். அனந்தன் அவன் உதாரகுணத்தை யறிந்ததும் "அடடா! நாம் மூடத்தனமாய் இவனுக்கு நன்மையே செய்கிறேமென்று எண்ணிக்கொண்டோமே யன்றி உண் மையில் நமது செய்கையால்தான் இத்தகைய துன்பங் கள் நேர்ந்தன என்று உணரவில்லை என்று சிந்தித்தவனுகிக் குலசேகரன் பாதங்களிற் பணிந்து "நண்பனே! என் தலை வனே! நான் நல்ல எண்ணத்தோடேயே யுன் காதலியை யும் உன்னையும் கப்பலுக்குக் கொண்டுபோக நினைத்தேன். பின்னல் நீ யதற்குச் சந்தோஷமே யடைவாயென்று நான் எண்ணினேன். ஆயினும் நான் செய்தது பெருந்தவறே யென்று இப்போதறிகிறேன். தாங்கள் என்னைப் பூரண மாய் மன்னித்து முன்போல் நடத்தப் பிரார்த்திக்கிறேன். இன்றேல் தங்களால் காப்பாற்றப்பட்ட இந்த உயிரைக் கட்டாயம் விட்டுவிடுவேன் என்று கடவுளறியக் கூறு கிறேன்" என்ருன்.

எப்போதும் இரக்கமனமுடைய குலசேகரன் என்ன செய்வான். அனந்தன் தனக்கு உண்மையானவனென் றும், நாய்போல் தன்னிடம் அன்பும் நன்றியுமுடையவ னென்றும் அறிவான். அவனுக்கு உலக அனுபவம் தெரியாதென்றும் மந்தமதி யுடையவனென்றும் தனக்குத் தெரியும். ஆகையால் அவனைப் பூரணமாய் மன்னித்த

தோடு தனக்குள்ள அதிகாரத்தாலும் செல்வாக்காலும் அவனைத் தன் கப்பலில் ஒரு உத்தியோகஸ்தனுக்கி விட்டான். அதனுற்ருன் அனந்தன் இப்போது குலசேகரனேடு சமமாயுட்காரும் அந்தஸ்துப் பெற்றவனுனன். இனி கதையைத் தொடங்குவோம்.

குலசேகரனும் அனந்தனும் சிற்றுண்டி யருந்தி முடிந்ததும், குலசேகரன் "அனந்தா! இனிப் புறப்படலாமே?" என்றுன். அனந்தன் ஆகா என்று மேஜை மேலிருந்த மணியை யடித்ததே குலசேகரனுடைய வேலைக்காரன் நாணயமான உடையோடு எதிர்வந்து நின்றுன். குலசேகரன் வண்டி தயாராய் விட்டதா என்றுன். வேலைக்காரன் ஆகா என்றுன். உடனே இருவரும் சென்று வண்டியில் ஏறினர்கள்.

---

## 78-வது அத்தியாயம்.

அதே தினம் மாலை நாலரை மணியிருக்கும். தைரியநாதம் பிள்ளை, மீனுள், புனிதவதி, முருகப்பன், நாகம்மாள் இவர்கள் தங்கள் விசாலமான அறையில் உட்கார்ந்து அப்போதுதான் சிற்றுண்டி யருந்தி முடிந்தது. வேலையாள் பாத்திரங்களை யெல்லாம் எடுத்துச் சென்றுன். அச்சமயம் வாயில் காப்போன் வந்து ஒரு சீட்டைத் தைரியநாதரிட மளித்தான். அவர் அதைக் கண்டதும் "அவர்களை யழைத்துவா" என்று கூறிவிட்டுக் குலசேகரனும் அனந்தனும் வருகிருர்கள். அனந்தன் செய்த நன்றி மறக்கற்பாலதன்று" என்ருர். மறு நிமிடம் கதவு திறக்கப் பட்டதும் குலசேகரனும் அனந்தனும் அறைக்குள் வந்தார்கள்.

அவர்களைக் கண்டதும் தைரியநாதர் எழுந்து இரண்

டடி முன் சென்று இருவர் கரங்களையும் பற்றிக்கொண்டு உங்களுக்குச் சந்தோஷத்தோடு நல்வரவு கூறுகிறோம் என்றார். மறுவினாடி அதிசயமான ஒரு சம்பவம் நேர்ந் தது. முருகப்பான் பாய்ந்து போய்க் குலசேகரனை இறு கத் தழுவிக்கொண்டு "அண்ணா! எனக்கு ஆசி கூறு. இப் போது நீயே யென் தந்தை" என்றான். குலசேகரன் கண் ணீர் விட்டுக் கொண்டே "அந்தோ! இத்தகைய தம்பிக்கு நான் செய்த துரோகத்தை யெத்தனை சென்மங்களில் திருத்துவேன்; ஓ கடவுளே!" என்று தேம்பித்தேம்பி யழு தான். அதே வினாடி நாகம்மாள் பாய்ந்து வந்து அவர் களிருவரையும் தழுவிக்கொண்டு "என் அருமை மக்களே! போனசங்கதி யனைத்தும் மறந்து விடுங்கள். உங்களுக்குத் தாயும் தந்தையுமாக நான் இருக்கிறேன். இனி நீங்கள் ஒரு உயிரும் இரண்டு உடலும்போல் இருங்கள்; கடவுள் உங்களைக் கைவிடார்" என்றாள்.

குலசேகரன் அதுகாறும் தன் தாயார் அங்கிருப்பதை யறியவில்லை. உடனே யவள் பாதங்களில் வீழ்ந்து "என் அன்னாய்! என் துர் அதிர்ஷ்டத்தால் இது காறும் நான் உன்னை யறியக்கிடைக்கவில்லை. கடைசியில் என் தந்தை யால் யாவுமறிந்தேன்; அந்தோ! உன்னைப் போஷித்து உனக்கு உபசாரம் செய்துகொண் டிருக்கவேண்டிய புண் ணியத்தை யிதுகாறும் பெறவில்லை. இனிப் பெற்றேன். ஆயினும் நீ என்னை அக்கோயிலில் நான் சிறைப்பட்டிருந்த சமயம் வந்து காப்பாற்றியபோது என்மனம் கரைந்து விட்டது. அந்தோ! அது இயற்கையாலுண்டான மாத்ரு வாஞ்சையென்று அறியாமற் போய்விட்டேன். நான் என்ன அபசாரம் செய்திருந்தாலும் என்னை மன்னித்து விடு இனி என்னைவிட்டு ஒரு கணமும் பிரியவேண் டாம்...." என்று கண்ணீர் விட்டுக்கொண்டே கூறினான்.

முருகப்பன் ஒருப்க்கம் "அம்மா! என் தாயை நான் அறியேன். தாயின் அன்பே யெனக்குத் தெரியாது. ஆனல், நீ தெரிந்தோ தெரியாமலோ நான்ருன் உன் தாய் என்று கூறினே. நீயே என் தாய். உனக்கு ஒரு பிள்ளை யல்ல, இருவரிருக்கிருேம்" என்றுன். நாகம்மாள் மூச்சு திணறிக்கொண்டு வாய்குளறிக்கொண்டே "ஆம் ஆ... ஆம்....இரண்டு இரத்தின...ங்கள்" என்று கூறிக்கொண்டே மூர்ச்சையாய்ச் சாய்ந்துவிட்டாள். ஏனெனில் இதுகாறும் சகிக்கொணுத் துன்பத்தால் மனம் நொந்துகொண்டிருந்த அவள் இப்போது ஏககாலத்தில் இத்தகைய சந்தோஷத்தை யடையவே, அது அவளால் சகிக்கமுடியாததாய் விட்டது. கீழே விழப்போனவளைப் புத்திரர் இருவரும் ஏந்திக் கொண்டார்கள். அங்கிருந்தவர்கள் அக்காட்சியைக் கண்டதும் யாவர் கண்களிலும் நீர் வடிந்தது. அனைவரும் உடனே நாகம்மாளை மஞ்சத்தில் படுக்கவைத்து வேண்டிய உபசாரங்களனைத்தும் செய்து அவள் மூர்ச்சை தெளியச் செய்தார்கள். நடந்த காட்சியைக் கண்டு, மனங்கரைந்து கண்ணீர் உகுத்தார்கள். நாகம்மாளுக்குச் சகல உபசாரங் களும் செய்யப்பட்டன. சற்று நேரத்திற்குள் அவள் மூர்ச்சை தெளிந்து உட்கார்ந்தாள். அவளால் உடனே பேசமுடியவில்லை.

அதற்கிடையில் அனந்தன் அங்கிருந்தவர்களை நோக்கி "என் அருமையான நண்பர்களே! என்னுடைய வேண்டு கோளைக் கேளுங்கள். தைரியநாதம் பிள்ளையவாள்! தாங் களும் தங்கள் மூத்தகுமாரியாகிய மீனுளுமே என் வேண்டு கோளை முக்கியமாய்க் கேட்கவேண்டும். அன்று எனது நண்பராகிய குலசேகரரையும் நமது மீனும்பாளையும் கப் பலுக்குக் கொண்டுபோக நான்ருன் ஏற்பாடு செய்தேன். ஆனல் கடவுளறியக் கூறுகிறேன். நான் அப்படிச் செய்ய

முயன்றது எள்ளளவேனும் கெட்ட எண்ணங் கொண் டல்ல. என் நண்பர் தன் காதலியாகிய மீனம்பாள்மேல் தன் ஆவியையே வைத்திருந்தார். அச்சமயம் ஒருமுறை யிந்தம்மாளைக் கண்டு பேசிவிட்டு வந்து விடுவதாய்க் கூறி ஞர். ஆயினும் அவர் இருக்கும் நிலைமையில் மறுபடி இன் னெருமுறை பார்த்துவிட்டு வந்து விடுவேன் என்பார். இது மறுமுறை மறுமுறை யென்று போய்க்கொண்டே யிருக்கும். ஆகையால் நாம் அவரையும் இந்தம்மாளையும் அழைத்துக்கொண்டுபோய்க் கப்பலில் சேர்த்துவிட்டால் பிறகு இவருடைய கோபத்தைத் தணித்துக்கொள்ளலாம். இந்தம்மாளும் சாந்தமாய் விடுவார்கள் என்று எண்ணிக் கொண்டேன். கடவுளறிய இதுவே உண்மை. இதுகாறும் எனக்கு ஸ்திரீகளிடம் கற்பு என்ற ஒன்று இருக்கிற தென்று தெரியாது. இத்தகைய உத்தமகுணங்களையுடைய ஒரு கன்னிகையை, படாடோபத்தையும், உலகபோகங் களையும் கண்டு மயங்காத மாதரையும் நான் இதுகாறும் கண்டதில்லை. எல்லாமாதர்களும் பொருளுக்கும் உலக போகத்திற்கும் ஆசைவைத்து எதற்கும் உடன்படுவார்க ளென்றே நான் இதுகாறும் மூடத்தனமாய் எண்ணி யிருந்தேன். இந்த உத்தமியால் நான் உலகின் மாதர்களில் கற்பரசிகளுமிருக்கிறார்களென் றுணர்ந்தேன். நான் நல்ல எண்ணத்தோடு அக்காரியத்தைச் செய்தேனாயினும் அது குற்றம் குற்றமேயென்று இப்போது நன்றாக உணர்ந்து கொண்டேன். குலசேகரர் முதலில் என் மேல் கொண்ட கோபத்தால் என்னைக் கொன்றுவிட்டே யிருப்பார்; ஆனால் அவருடைய பெருந்தன்மையான குணத்தால் என்னிடம் பேசவேண்டாம் என்று மட்டும் கூறினர். பிறகு நீதிச்சபையில் அவர் எனக்காகப் பேசி எனக்கு மன்னிப்பு அளிக்கும்படி செய்தார். அத்தகையவருக்கு

நான் செய்த அபசாரத்திற்காக என் பிராணனைப்போக்கிக்கொள்வதே தக்க பிராயச்சித்தம் என்று கூட ஒரு சமயத்தில் நான் கருதினேன். அந்த உத்தமருடைய குணத்தைப் புகழ்ந்துகூற என்னால் முடியாது! அவர் என்னைப் பூரணமாய் மன்னித்ததோடு என்னையொரு மரியாதையான மனிதனுக்கிவிட்டார். நீங்களும் என்னை மன்னித்துவிட்டால்தான் என் மனம் நிம்மதியடையும். இன்றேல் நான் உங்கள் முன் நிற்கவும் பாத்திரனாக மாட்டேன்" என்றான்.

**தைரியநாதர்:**—"நண்பனே! நீ முன்பு என் புத்திரிகளைக் காப்பாற்றிய ஒரு செய்கையாலேயே உன் இயற்கையான குணம் எத்தகையதென்று நான் மட்டுமல்ல நாங்களனைவரு மறிந்துகொண்டோம். நீசெய்த அத்தகைய சகாயத்திற்குரிய நன்றியை நாங்கள் ஒரு போதும் மறக்கமாட்டோம். இப்போது நீ கூறிய சங்கதிகளனைத்தும் எங்களுக்குத் தெரியும். முன்னமே பூரணமாய் உன்னை மன்னித்து விட்டதோடு உன் இயற்கைக் குணங்கள் நல்லவையென்றும் அதனாலே குலசேகரன் உன்னை நண்பனாகவெண்ணி உன்மேல் அன்பு வைத்து நடத்துகிறானென்றும் அறிந்துகொண்டோம். நீ எப்போதுமே குலசேகரனுக்கு அன்பான நண்பனாகவிருந்துகொண் டிருக்க வேண்டுமென்பதே எங்கள் விருப்பம்" என்றார்.

இதற்கிடையில் நாகம்மாள் பூரணமாகப் புத்தி சுயாதீனமடைந்தாள். ஆயினும் அவள் முன்பே மனவியாகுலத்தாலுண்டான அசௌக்கியத்தால் மிக்க பலகீனமடைந்திருந்தாள். இப்போது திடீலென்று எதிர்பாராத சந்தோஷமுண்டானதால் நேர்ந்த நரம்புகளின் அதிர்ச்சியால் அவளுடைய ஜீவிய சக்தி யதிகமாகக் குறைந்துவிட்

டது. அவள் சமாளித்துக்கொண்டு படுக்கையில் உட்கார்ந்து தைரியநாதரையும் மற்றபேரையும் அருகில் வரும்படி சமிக்கை செய்தாள்.

அவள் கூப்பிட்ட மாதிரியால் யாவரும் உடனே அம்மூதாட்டியினருகிற்சென்று சூழ்ந்து கொண்டார்கள். நாகம்மாள் அவர்களனைவரும் உட்கார்ந்த பின் ஒவ்வொருவரையும் நன்ருக உற்றுநோக்கியபின்,

"நான் கூறுவதை யாவரும் தயவுசெய்து கவனமாய்க் கேளுங்கள். இப்போது என் ஆயுட்காலம் நெருங்கிவிட்டதென்று எனக்குத் தெரிகிறது. நான் முதலில் என் புத்திரனை யிழந்து விட்டேன். என்னை வஞ்சித்துப் படுமோசம் செய்த என் கணவனையும் அப்போதிழந்து விட்டேன். அச்சமயம் நேர்ந்த என் மனேவியாகுலமே எனக்குப் புத்திச் சபலத்தை யுண்டாக்கிவிட்டது. அதனுலேயே என் வாழ்க்கையின் இயற்கை மாறிவிட்டது. இப்போது எனக்கு அப்பழைய சங்கதிகளும் என் பழைய நடக்கைகளும் யாவும் கனவுபோல் நன்ருக விளங்குகின்றன.

இப்போது என் ஆயுள்காலம் முடிவிற்கு வந்து விட்டதால் எனக்கு முன்பின் விஷயங்களெல்லாம் தெளிவாய் விளங்குகின்றன. நான் இன்னும் மூன்று வாரங்களுக்குமேல் இருக்கமாட்டேன். உங்கள் அனைவர்க்கும் நல்ல ஆசீர்வாதம் செய்கிறேன். என் கோரிக்கையொன்றிருக்கிறது. அது நிறைவேறி விட்டால் எனது ஆன்மா நிம்மதியோடு என் தேகத்தை விட்டு நீங்கும்" என்று கூறிவிட்டு தைரியநாதரை யருகில் வரும்படி கைகாட்டி யழைத்தாள்.

தைரியநாதர் அவ்வாறே யவளருகிற் சென்று உட்கார்ந்து, "உன்மனதிற்குத் திருப்தியை யுண்டாக்கிக் கடைசிகாலத்தில் உன் ஆன்மா நிம்மதியோடு சந்தோட

மாய்ச் செல்லவேண்டியதற்கு என்னாலாகவேண்டிய காரியம் ஏதேனுமிருந்தால் நான் மனப்பூர்வமாகச் செய்ய ஆயத்தமாயிருக்கிறேன்" என்றார்.

நாகம்மாள்:—"என் அன்பார்ந்த சுற்றத்தாரே! இதுகாறும் நடந்த சம்பவங்களால் என் மனம் ஒரு ஆசையை நாடியிருக்கிறது. அதாவது, நமது மீனாளை யென் புத்திரனாகிய குலசேகரனுக்கு நீ மணம்புரிவதை யென் கண்ணார நான் கண்டால் என் ஆன்மா திருப்தியோடு மேலுலகம் செல்லும்" என்றனள்.

தைரியநாதர்:—"அவர்கள் இருவர்க்கும் பரஸ்பர அன்பிருந்து அவர்கள் அவ்வாறு விரும்பின் எனக்கொரு ஆக்ஷேபனையுமில்லை. நான் சந்தோஷத்தோடேயே அவ்வாறே செய்து வைப்பேன். அதற்காக நீ கலக்கப் படவேண்டாம்" என்றார்.

நாகம்மாள் உடனே தன் புத்திரனாகிய குலசேகரனை யழைத்து, "குழந்தாய்! நீ முன்பு மீனாள்மேல் பூரண விசுவாசம் கொண்டிருந்தாய் என்றும் இப்போதும் கொண்டேயிருக்கிறாய் என்றும் நான் அறிவேன். நீயிப்போது எதையும் வெளிப்படையாய் என்முன் கூறு" என்றாள்.

குலசேகரன்:—"அம்மா! நான் இதுகாறும் உன்னருகிலிருந்து உனக்குப் பணிவிடைசெய்து திருப்தியையுண்டாக்கும் புண்ணியம் பெறாதவனாய் விட்டேன். இப்போது என்னைப்பற்றி மீனாள் விஷயத்தில் நீ கூறிய அபிப்பிராயம் சரியானதே. ஆனால் கடைசியாய் நான் மீனாளைக் கண்டு பேசியபோது அவள் இவ்விஷயத்தைப் பற்றி வெளியிட்ட அபிப்பிராயத்தால் நான் மறுபடி அதைப்பற்றிப் பிரஸ்தாபிக்க விரும்பலாகாது. ஏனெனில் எந்த விஷயத்திலும் அவள் மனதிற்கு வருத்தத்தை யுண்டாக்கலாகா

தென்பதே யென் எண்ணம். இது ஒன்றே யெனக்குத் தெரியும். இப்போது மீனாள் தன் அபிப்பிராயத்தை மாற்றிவிட் டிருந்தால்—நான் அவ்வாறே நம்புகிறேன்—அவளுடைய தந்தை நான் நம்புகிறபடி இதற்குச் சந்தோஷமாய் ஒப்புக்கொண்டால், என்னை விடப் பெரும் புண்ணியசாலி யாருமில்லை யென்றே நான் கருதி மகிழ்ச்சியடைவேன். அப்படி நேராவிடினும் நான் கொண்ட முதற் காதலுக்குத் துரோகம்செய்யாமலே, அந்த விடத்தில் வைத்த அன்புக்குத் துரோகம் நினைக்காமலே என் வாழ்நாளைக் கழிப்பதென்று எனக்குள் தீர்மானித்துக் கொண்டிருக்கிறேன்" என்றான்.

நேயர்களே! இச்சந்தர்ப்பத்தில் நமது மீனாள் கைக்கொண்டொழுகும் நெறியே உத்தமமான கற்பின் இலட்சணமாகும். அவள் முதலில் குலசேகரனுடைய தொழிலின் உண்மை யின்னதென அறியாமலே அவன்மேல் காதல் கொண்டுவிட்டாள். பிறகு அவனுடைய நடக்கை மிக்க அகௌரவமான தென்று தெரிந்து அவனை மணம்புரியலாகாதெனத் தீர்மானித்துக்கொண்டாள். ஆனால் அத்தகைய சந்தர்ப்பத்தில் வேறெந்த கன்னிகையும் வேறொருவனை மணம்புரிந்து கொள்வாள். அதிலும் அவர்கள் ஆசாரப்படி மிக்க தாராளமாய்ச் சற்றும் அகௌரவ மின்றியே அவ்வாறு இரண்டு மூன்று பேரைக்கூடத் தள்ளிவிட்டு நான்காவதொருவனை மணபுரிந்து கொள்ளலாம்.

ஆனால் நமது மீனாளோ எப்போது ஒருவன்மேல் இச்சைகொண்டு விட்டோமோ பிறகு இன்னொருவனை யிச்சிப்பதே பாபம் என்று கருதினாள். இதுதான் பதிவிரதையின் இலக்ஷணம். ஸ்திரீகளில் அத்தகைய குணமுடையோருண்டு. ஆனால் ஆடவரில் குலசேகரன் குணத்

தைப் போன்ற குணமுடையோரைக் காண்பது மிக்க அரிது. மிக்க உத்தமியும் மகாபதிவிரதையுமான மனைவியரைக்கூட அலட்சியம் செய்து அவர்களைத் தனியே மனையிலிருத்தி வைப்பாட்டியிடம் சென்று சந்தோஷத்தை யனுபவிப்போர் அனேகருளர். நமது குலசேகரன் ஏக பத்தினி விரதமுடையோன். ஆடவரின் சிறந்த குணங்களில் இது சிரேஷ்டமான தொன்று.

அவன் மொழிகளைக் கேட்ட தைரியநாதரின் மனம் மிகவும் இளகிவிட்டது. அவர் "குலசேகரம்! இத்தகைய உத்தமகுணமுடைய ஆடவனைக் கணவனாகக்கொள்ள எந்தக் கன்னிகைதான் விரும்பமாட்டாள். எந்த மனிதன் தான் இத்தகைய புருடனுக்குத் தன் புத்திரியை யளிக்க விரும்பமாட்டான்" என்றார்.

நேயர்களே! இதற்குமேல் அந்த விஷயம் எப்படி முடிந்ததென்று நாம் கூறவேண்டியதில்லை. இதைப்பற்றிச் சுருக்கமாகவே கூறிவிடுகிறோம். நாகம்மாள் சந்தோஷத்தோடு சயனித்துக்கொண்டாள். மீனாள் நாணத்தோடு பேசாமல் உட்கார்ந்திருந்தாள். குலசேகரன் மிக்க நன்றியோடும் வணக்கத்தோடும் தைரியநாதருக்குத் தகுதியான பதிலளித்தான். அதன் பிறகு யாவரும் போஜனத்திற்கு உட்கார்ந்தார்கள்.

மறுநாள் பத்திரிகைகளில் கீழ்க்கண்ட பிரசுரம் இருந்தது:—

ஓர் சந்தோஷமான திருமணச்செய்தி.

நமது சுத்தவீரராகிய காப்டென் குலசேகரர் மணமுடித்துக் கொள்ளப்போகிறார் என்ற சங்கதியைக் கேட்க யாவரும் மிக்க சந்தோஷமடைவார்கள் என்பதில் ஐயமில்லை. சத்தத்தீவின் அதிபராகிய கனம்பொருந்திய தைரியநாதர் அவர்களின் மூத்தகுமாரத்தியாகிய மீனும்

பாளையே அவர் மணம் செய்வதாய் நிச்சயம் செய்யப்பட்டிருக்கிறது. தைரியநாதர் வடநாட்டிலிருந்து அங்கு வந்து குடியேறிய ஒரு புராதனமான கௌரவம் பொருந்திய குடும்பத்தைச் சேர்ந்தவர். மிக்க செல்வ வந்தர். அவர் புத்திரிகள் இருவர். இளைய புத்திரியை முருகப்பன் என்ற கௌரவம் பொருந்திய வாலிபர் மணம்புரிந்து கொண்டிருக்கிறார். இரண்டு புத்திரிகளும் அத்தீவிற்கே இரண்டு இரத்தினங்கள் என்று கூறலாகும். மீனம்பாள் மிக்க அழகுவாய்ந்த கன்னிகை யென்றும் பெண்களுக்குரியச் சகல குணங்களும் நிறைந்த உத்தமி யென்றும் அறிகிறோம். காதலர் இருவரும் மணம்புரிந்து கொண்டு சகல பாக்கியங்களோடும் நீடூழி வாழ்ந்துகொண் டிருக்கவேண்டுமாய்க் கடவுளைப் பிரார்த்திப்போமாக."

மூன்றாவது வாரம் அவர்களுடைய திருமணத்தை நடத்துவதென்பது நிச்சயிக்கப்பட் டிருந்தது. கலியாணம் நிச்சயம் செய்யப்பட்ட மூன்றாவது நாள் தைரியநாதர் ஒருவிருந்து வைத்தார். அந்த விருந்திற்கு உத்தமநாதர் முதலிய இராணுவஉத்தியோகஸ்தர்களும், மந்திரிகள் முதலான சீமான்களும் வரவழைக்கப்பட்டார்கள். தைரியநாதர் மறுநாட்காலை குடும்பத்தோடு தமது வாசஸ்தலத்திற்குச் செல்வதால் அந்த விருந்து வைக்கப்பட்டது. அந்த விருந்துக்கு வந்தவர்கள் அனைவரும் குலசேகரன் மீனாளை மணம் புரிவதைப்பற்றி மிக்க சந்தோஷம் காட்டி வாழ்த்தினார்கள்.

கலியாணம் நடந்தபோது பெரிய உத்தியோகஸ்தர்களனைவரும் வந்திருந்தார்கள். பைரவி கிருஷ்ணப்பன் மிக்க உற்சாகத்தோடு சங்கீதக் கச்சேரி நடத்திக்கொண்டிருந்தான். அரசர் தமக்குப் பதிலாகப் பிரதான மந்திரியை யனுப்பினார். மணமகனுக்கும் மணமகளுக்கும் வந்த பரிசு

களே ஒரு ஆஸ்தியாய் விட்டன. அரசர் மரியாதையாய் அளித்த பரிசன்னியில் ஒரு அழகிய மாளிகையை மண மகளுக்குப்பரிசளித்தார். மணமுடிந்ததும் மணமக்கள் அம்மாளிகையில் வசிக்கச் சென்றார்கள். அரசர் கொடை எங்கேனும் அறைகுறையாய்ச் செய்வாரோ. அம்மாளிகை எல்லா விஷயங்களிலும் செலவை மதிக்காமல் பூரணமாக அலங்காரம் செய்யப்பட்டிருந்தது.

குலசேகரன் கொஞ்ச காலத்திற்குள் தன் சத்திய நெறிகளாலும், வீரச்செயல்களாலும், கருணையும் பொறுமை யும் பொருந்திய இனிய குணங்களாலும் ஒரு சேனாதிபதி பதவியையும் திரண்ட செல்வத்தையும் மங்காதகீர்த்தியையு மடைந்தான். தைரியநாதர் பல பேரன் பேத்திமார்களை யெடுத்து வளர்த்து மிக்க வயோதிகமான காலத்தில் சுற்ற மனைத்தும் அன்போடு புடைசூழ நிம்மதியான மனதோடு இம்மண்ணுலக வாழ்க்கையை நீத்து விண்ணுலகடைந்தார்.

புனிதவதியும் அவள் கணவனாகிய முருகப்பனும்கூட சுகவாழ்க்கையையே யனுபவித்தார்கள். குலசேகர னுடைய செல்வாக்கால் முருகப்பன் முதலில் இராணுவத் தில் கடைசி உத்தியோகஸ்தனாகச் சேர்ந்து தன் நன் முயற்சியாலும் ஊக்கத்தாலும் பின்னால் உயர்தரக் கௌரவபதவியை யடைந்தான். அவனும் குலசேகரனும் கடைசி வரையில் பூரணமான சகோதர வாஞ்சையோடு வாழ்ந்து வந்தார்கள். நாகம்மாள் குலசேகரனுக்கு மண மான ஒரு மாதத்திற்குள் தேகவியோகமடைந்தாள். அவள் தன் திரண்ட ஆஸ்தியைக் குலசேகரனுக்கும் முருகப்ப னுக்கும் பகிர்ந்து கொடுத்துவிட்டாள். தைரியநாருடைய பெருத்த செல்வமும் பூஸ்திதியும் அவ்வாறே அவருடைய இரண்டு பெண்களுக்கும் பகிர்ந்து கொடுக்கப்பட்டது.

பைரவிகிருஷ்ணப்பன் தன் வயோதிக காலத்தைக்

குலசேகரன் குடும்பத்திலேயே கழித்து விட்டான். அனந்தன் தனது நாற்பதாவது வயதில் ஒரு செல்வவந்தராகிய வர்த்தகருடைய புத்திரியை மணம்புரிந்துகொண்டான். அவள் மூலமாய் அவனுக்குக் கொஞ்சம் செல்வம் கிடைத்தது. குலசேகருடைய தயவால் அவனும் ஒரு கப்பித்தான் பதவியை யடைந்து சந்தோஷமாகவே காலத்தைக் கழித்தான்.

நேயர்களே! இப்போது நமது கதை முடிவிற்கு வருகிறது. இக்கதையில் சம்பந்தப்பட்ட ஆட்களில் ஒவ்வொருவருடைய நடவடிக்கையையும் குணங்களையும் பின்னால் அவர்களடைந்த நிலைமையையும் கவனித்துப் பாருங்கள். தைரியநாதம் பிள்ளையின் புத்திரிகள் இருவரும் பெண்களுக்குரிய அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு என்ற குணங்களும், அடக்கம் பொறுமை சீவகாருண்யம் முதலிய நற்குணங்களுமுடையவர்கள். அவர்கள் குணத்திற்குத் தக்கபடியே கடவுள் அவர்களுக்குச் சரியான கணவர்களையும் திருப்தியான இம்மைப் பயன்களையும் அளித்தார். மீனுளுடைய கற்பு நெறியும், தீரமும், கற்பிற்காக அவள் உலக இன்ப முழுமையும் தியாகம் செய்ததும் வியக்கத்தக்கவையாகும்.

குலசேகரனுடைய ஆதி நடக்கை மிக்க பாபகரமும் அகௌரவமுமானதே. ஆயினும் அவனுடைய இயற்கைக் குணம் நல்லதானபடியால் அவன் செய்த ஒரு ஜீவகாருண்யம் பொருந்திய நன்னடக்கையானது அவனுடைய பூர்வ துர்நடக்கையின் பயன்களையெல்லாமழித்துவிட்டதோடு அவனை மேலான நிலைமைக்குக் கொண்டு வந்துவிட்டது. இதனுல் ஒருவன் எவ்வளவு தீயநடக்கையுடையவனுயினும் ஒரு காலத்தில் தன் நடக்கை கெட்டதென்றுணர்ந்து அவற்றிற்காக மனஸ்தாபப்பட்டு

நல்வழியில் திரும்புவானாயின் ஆண்டவன் அவனை மன்னித்து அவனுக்கு நன்மையே செய்கிறார் என்றும், அவர் கருணாநிதியென்றும் நன்றாக விளங்குகின்றது.

நல்லோர் சகவாசத்தால் தீயோரும் நல்லோராவர். "மேரு மலையைச் சார்ந்த காகமும் பொன்னிறமடையும்" என்பது பழமொழி. அதுபோலவே மூடனாய்த் துஷ்டர்களாகிய கள்ளர் கூட்டத்தில் சேர்ந்திருந்த அனந்தன் குலசேகரனிடம் அன்பும் நன்றியும் வைத்து அவன் வழியில் நடந்து வந்ததால் நல்ல நிலைமையையடைந்தான். அவனோடு கூடவிருந்த மற்ற கடற்கொள்ளைக்காரர்களெல்லாம் தங்கள் தங்கள் துர்நடக்கைகளுக்குத் தக்க தண்டனையையடைந்தார்கள்.

துஷ்டர்கள் தற்சமயம் தாங்கள் பிடிபடாததால் சந்தோஷமடைந்து நல்ல நிலைமையிலிருப்பதாகத் தோன்றினும் கடைசியில் பிடிக்கப்பட்டுத் தண்டனையும் அவமானமும் அடைவார்களென்பது உண்மை. நன்னடக்கைக்கும், நற்குணத்திற்கும் கருணாநிதியாகிய வள்ளல் ஆச்சரியமான விதமாய் நல்ல பதவியை யெப்படியேனும் அளிக்கிறார் என்பதும் சத்தியம்.

ஓம் தத் ஸத்

முற்றிற்று.

---

" ஆனந்தபோதினி " அச்சுக்கூடம், சென்னை.

புதிய நாவல் பெருகும் ஆவல்!!

நாவல் வாசிக்கும் நண்பருக்கு நல் விருந்து

# மாதவி மாதவன் அல்லது

## ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு.

## (2-பாகம்.)

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக் கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இது வரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

# அமராவதி 2-பாகம்.

ஆரணி-குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமுமுடையவனுயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

# இந்திராபாய்

இதில் சம்பந்தப்பட்ட குற்றவாளியாகிய முஷ்டிக்கரம் என்ற திருடன் கல்வி, சாத்திர ஆராய்ச்சி, தந்திரம், சாமார்த்தியம் முதலிய யாவும் உடையவனுதலின், அவன் தன்கூட இருக்கும் ஆட்களுக்குக்கூட, தன் சுய உருவத்தைக் காட்டாமலே கேட்போர் நெஞ்சம் கலங்கும்படியாகச் செய்யும் பல கொலை களவுகள் அதிசயமானவைகளே. **இந்திராபாய்** பன்முறைகளில் அவனிடம் சிக்கிக்கொண்டு சற்றும் எதிர்பாராத ஆச்சரியமான விதமாய்ப் பிராணுபத்துக்களிலிருந்து தப்புவதும், அவளைக் காப்பாற்றவும், முஷ்டிக்கரத்தைக் கண்டு பிடிக்கவும் துப்பறியும் கிருஷ்ணராவ் செய்யும் சாமர்த்தியங்களும் வாசிப்போர்க்குப் பிரமையையுண்டாக்கும்.

இதன் விலை ரூபா 2 8 0

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

186523

உ

# இராஜாமணி

அல்லது

# ஓர் அபூர்வ மர்மம்.

## கடவுள் வணக்கம்.

ஓதிடு மறைகள் நான்முகன் முதலோ
ருணர்வதற் கரியனா யன்பர்
கோதிலா வுளத்தி லமர்ந்தருள் பொழியுங்
குறைவிலாச் சச்சிதா னந்தத்
தாதையாய்த் தமராய்த் தண்ணருள் வெளியிற்
சராசர மியாவையுங் காட்டி
யாதியு மீறுங் கடந்தவெம் பரம
னடிமல ரகத்துள்வைத் துய்வாம்.

---

## 1—வது அத்தியாயம்.

பூவுலகின்கண் பலவகை யின்பங்களும் நிறைந்து செழிப்புற்று விளங்கும் இந்திரபுரியில் இப்போது நாம் கூறப்புகும் கதை நிகழ்கின்றது. அந்த நகரம் எல்லா விஷயங்களிலும் முதன்மை வாய்ந்தது. உலகிலுள்ள எல்லா ஜாதி மனிதர்களையும் அங்குக் காணலாம். மிக்க நாகரீகமுடையதாகவும், ஜனத்தொகையில் பெருத்ததாகவும், சாமார்த்தியத்தில், அதாவது பலவிதமான சாத்திர ஆராய்ச்சியில் சிறந்ததாகவும் பெருமை பெற்று விளங்கும்.

எந்த நகரத்திலும், நல்லது தீயது ஆகிய இரண்டிலும் அபூர்வமான பலவித நிகழ்ச்சிகளைக் காணலாம்.

அதுபோல் இந்திரபுரியில் சாத்திர விற்பன்னர்களையும், பண்டிதர்களையும், மிக்க யோக்கியர்களையும் காண்பதோடு மிக்க தந்திர சாமார்த்தியமுடைய கள்ளர்களையும், மனம் நடுங்கும் போக்கிரிகளையும் துஷ்டர்களையும் அயோக்கியர்களையும் காணலாம்.

அத்தகைய நகரில் போலீஸ் ஸ்டேஷன்கள் பலவுண்டு. அவற்றில் ஒரு போலீஸ் ஸ்டேஷன் எதிரில் ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று இருவர் சென்று கொண்டிருக்கிறார்கள். அவர்களில் ஒருவன் நமது துப்பறியும் சிங்கமாகிய ஆனந்தசிங்கின் நண்பனும், துப்பறியும் திறமையில் அவனுக்கு இரண்டாவதாகப் பெயர் பெற்றவனுமாகிய ஜெயசிங் என்பவன்.

அவர்கள் அந்த ஸ்டேஷனைக் கடக்கும்போது ஒரு ஸ்திரீ அதிலிருந்து வெளிவருவதை ஜெயசிங் பார்த்தான். அவன் துப்பறிபவனுதலால் அம்மாதின் முகக்குறியைக்கண்டதும் "இவள் ஏதோ விசேஷ சங்கதிக்காகவே போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்திருப்பாள்" என்று உணர்ந்து, அவளை நெருங்கி மரியாதையோடும், அன்போடும் "என்ன அம்மா! ஏன் இங்கு வந்தாய்? உனக்கு வேண்டுவதென்ன?" என்று வினவினன்.

அம்மாது மிக்க எச்சரிக்கையோடு நாற்புறமும் பார்த்து, "எனக்கு வேண்டியது ஒரு சரியான துப்பறியும் ஆள் தான் அதைப்பற்றி யொன்றும் கூற எனக்குப் பிரியமில்லை. கடந்த இரவு எங்கள்வீட்டிலிருந்து ஒரு பெண் காணமற் போய் விட்டாள்...." என்று கூறி அதற்குமேல் கூறமுடியாமல் தடுமாற்ற முற்றுப் பிறகு கடைசியில் அவளைக் கண்டுபிடிக்கக்கூடிய ஒரு ஆள்வேண்டும்" என்றாள்.

ஜெயசிங்:—“ஒரு பெண்ணு காணமற் போய் விட்டாள்? எம்மாதிரிப்பெண்? எங்கள் வீட்டிலிருந்து என்று கூறினையே, யாருடைய வீடு?” என்று வினவினுன்.

அம்மாது பதிலளிப்பதன்முன் அவனை யுற்றுநோக்கி, “நீ மிக்க வாலிபனுக விருக்கிருய். உன்னிலும் சற்று விவகாரம் உணர்ந்தவர்களாகவிருந்தால் அவர்களிடம் நான் எதையும் கூற அனுகூலமாகவிருக்கும்” என்ருன்.

அச்சமயம் தெய்வ சங்கல்பமாக ஆனந்தசிங்கே அவ்வழியாக வந்துகொண்டிருந்தான். ஜெயசிங் அவனைக் கண்டதே மகிழ்ச்சியோடு கூப்பிட்டான் ஆனந்தசிங் சட்டென்று திரும்பித் தன் நண்பன் என்று கண்டதும் துரிதமாக அருகில் வந்து “என்ன? என்ன சங்கதி? இம்மாது யார்?” என்ருன்.

அம்மாது ஆனந்தசிங்கைக் கண்டதும் என்ன காரணத்தாலோ அவனிடம் நம்பிக்கை கொண்டாள். ஆனந்தசிங்கைச் சற்று எட்ட அழைத்துச்சென்று குசுகுசு என்று என்னமோ கூறினுள். ஜெயசிங்குக்கு அதுகேட்கவில்லை. ஆனந்தசிங் முதலில் பராமுகமாய்க் கேட்பவன்போல் காணப்பட்டான். பிறகு திடீலென்று அவன் தேகத்தில் ஒருவித அசைவு உண்டாயிற்று. அதனுல் அவன் மனதில் விசேஷக்கிளர்ச்சியுண்டாயிருக்கிறதென்று ஜெயசிங்குக்கு ஏதோ அனுபவத்தால் புலப்பட்டது. “சரி ஆனந்தசிங்கின் மனதிற்குப் பிடிப்பான ஏதோ விவகாரம் சிக்கியிருக்கிறது. இனி நாம் நழுவி விடலாம்” என்று ஜெயசிங் எண்ணினுன். அச்சமயம் ஸ்டேஷனிலிருந்து போலீஸ் மேல் அதிகாரி வெளியில் வந்து ஜெயசிங்கைவிளித்து “ஆனந்தசிங் எங்கே? நான் அழைப்பதாக அவனிடம் கூறு” என்ருர்.

அவர் கூறியது ஆனந்தசிங் செவியில் வீழ்ந்தது. அவன் துரிதமாகத் திரும்பி ஸ்டேஷனுக்குள் செல்லும்

போது ஜெயசிங்கை நெருங்கி "நீ ஒரு ஆளை யிட்டுக் கொண்டு இம்மாதின் கூடச்சென்று விஷயங்களை ஆராய்ச்சி செய்; நான் வரவேண்டியது அவசியமாயின் எனக்குச் சொல்லியனுப்பு. நான் இன்னும் இரண்டுமணி நேரம் ஸ்டேஷனில்தானிருப்பேன்" என்று கூறிவிட்டுச் சென்றான்.

ஜெயசிங்குக்கு இரண்டாம் முறை கட்டளையிட வேண்டிய அவசியமில்லை. அவன் நாகலிங்கம் என்ற போலீஸ்காரனை யழைத்துக்கொண்டு அம்மாதினருகிற் சென்று "நீ யார் வீட்டிலிருந்து வந்தாய்? நான் உன்கூட வந்து விஷயங்களை யாராய்ச்சி செய்யவேண்டும்" என்றான். அம்மாது "அவர் அவ்வாறு கூறினரோ" என்று போலீஸ் பிரதம அதிகாரியிடம் பேசிக்கொண்டிருக்கும் ஆனந்த சிங்கைச் சுட்டிக்காட்டிக்கொண்டே வினவினாள்.

ஜெயசிங் ஆம் என்றதே அம்மாது "நான் இரண் டாந்தெருவில் ஆறுவது எண்ணுள்ள பூபாலப் பிள்ளையின் வீட்டிலிருந்து வந்தேன்" என்றாள். பூபாலப் பிள்ளை என்ற பிரசித்திபெற்ற பெயரைக்கேட்டதே, ஆனந்தஸிங் குக்குண்டான மனக்கிளர்ச்சியின் காரணம் இன்னதென்று ஜெயஸிங்குக்கு விளங்கிவிட்டது.

அம்மாது இரகசியமாகக் கூறத்தொடங்கி "அங் குள்ள ஒரு பெண், தையல் வேலை செய்துகொண்டிருந் தவள் அதிசயமான விதமாய்க் கடந்த இரவு காணமற் போய் விட்டாள். எனக்கு மிக்க பயங்கரமாயிருக்கிறது. அவள் தன் அறையிலிருந்து கொண்டுபோகப்பட்டிருக் கிறாள், ஆம் அவள் பலவந்தமாய்க் கொண்டுபோகப்பட் டிருக்கிறாள். அவள் சுயேச்சையாய்ச் சென்றவளே யல்ல. அவளைக் கண்டு பிடித்தே தீரவேண்டும். ஆம். நான் என் வயோதிக தசையின் ஆதரவுக்காகச் சேமித்து வைத்திருக்

கும் காசெல்லாம் அதற்காகச் செலவழித்தாலும் சரி'' என்று பிடிவாதத்தோடு மொழிந்தாள்.

அவள் முகத்திலுண்டான விகாரத்தாலும், அவள் காட்டிய அக்கரையாலும் ஜெயசிங் ஒருவிதச் சந்தேகங் கொண்டு "அந்தப்பெண் காணமற்போனதற்காக நீ இவ்வளவு வருத்தப்படுவதைப் பார்த்தால் அவள் உன் சுற்றத்தாளென்று கருதுகிறேன். என்ன உறவு?'' என்று வினவினன்.

அம்மாது "இல்லை. உறவு ஒன்றுமில்லை. ஆனல் மிக்க வேண்டிய சினேகி. எனக்கு மிக்க அன்பானவள். அவளை யெப்படியேனும் கண்டுபிடித்தே தீரவேண்டும்'' என்ருள்.

அதற்குள் அவர்கள் பூபாலம் பிள்ளை வசிக்கும் வீதியில் நுழைந்தார்கள். "அப்போது இதைப்பற்றி யொருவருக்கும் கூறலாகாது. நான் அவ்வாறு அவரிடம் கூறினேன். அவர் இதை இரகசியமாய் வைத்திருப்பதாகக் கூறினர். இக்காரியத்தை யொருவரு மறியாவண்ணம் நடத்தலாகுமல்லவா?'' என்று அம்மாது இரகசியமாய்க் கூறினள்.

ஜெயசிங் எக்காரியம் என்றதற்கு அவள், 'இப்பெண்ணைக் கண்டுபிடிப்பது' என்ருள். ஜெயஸிங் "இதைப்பற்றிய இன்னும் சில விஷயங்களை யறிந்தபின்பே அதைப்பற்றிக் கூறலாகும். அப்பெண்ணின் பெயரென்ன? நீ என்ன காரணத்தால் அவள் வீட்டிலிருந்து தன் பிரியத்தால் செல்லவில்லை யென்றும், பலவந்தமாகக் கொண்டுபோகப் பட்டாளென்றும் கருதுகிருய்?'' என்று வினவினன்.

அம்மாது "ஏன், எல்லாக் காரணங்களாலுந்தான். முதலாவது அவள் அம்மாதிரி நடக்கிறவளல்ல. அந்த அறையின் நிலைமையை நோக்க அப்படித்தான் தெரிகிறது- இல்லை இல்லை. அவர்களெல்லாம் சாளரத்தின் வழியாகவே

வெளிச்சென்றூர்கள். பக்கத்து வாயிற்படி வழியாக வீதிக்குச் சென்றூர்கள்'' என்றூள். ஜெயசிங், "அவர்கள் என்றுயே யாரை?'' யென்று கேட்டதற்கு, "அவள் யார் வந்து அவளைக் கொண்டுபோனூர்களோ அவர்களைத்தான் கூறுகிறேன்'' என்றூள்.

அம்மொழிகளைக் கேட்ட ஜெயசிங் 'பூ' என்றூன். அம்மாது, "அவள் கொண்டுபோகப்பட்டாள் என்று நீ நம்பவில்லையோ'' என்று கேட்டாள். அவன் "நீ சொன்ன மாதிரியே நடந்ததென்று நான் நம்பவில்லை'' என்றூன். அம்மாது போலீஸ் ஸ்டேஷன் இருக்கும் திக்கை நோக்கித் திரும்பி "அவர் சற்றேனும் சந்தேகங்கொண்டதாகக் காணப்படவில்லை'' என்றூள்.

ஜெயசிங் நகைத்துக்கொண்டே "அவள் பலவந்தமாகக் கொண்டுபோகப்பட்டாளென்று நீ அவரிடம் கூறிஞயோ?'' என்று கேட்டான். அம்மாது "ஆம் கூறினேன். அவர், 'வெகுவாக அப்படியே யிருக்கலாம்' என்று கூறினர். அவர் கூறியது உண்மையே. ஏனெனில் அவள் அறையில் மனிதர் பேசும் சந்தடியை நான் கேட்டேன்'' என்றூள்.

ஜெயசிங், எப்போதென்றூன். அம்மாது "அப்போது இரவு பனிரண்டரை மணி யிருக்கலாம். நான் நித்திரை செய்துகொண் டிருந்தேன். அவள் அறையில் குசுகுசு வென்று பேசிய சந்தடியால் நான் விழித்துக்கொண்டேன்'' என்றூள்.

ஜெயசிங்:—"இரு இரு. அவளுடைய அறை யெங்கிருக்கிறது? உன்னறை யெங்கிருக்கிறது? அதைக் கூறு'' என்றூன்.

அம்மாது "அவள் அறை மூன்றூவது மாடியில் பின் பக்கம் இருக்கிறது. என் அறை அதேமாடியில் முன் பக்

கம் இருக்கிறது" என்றாள். ஜெயசிங் "நீ யார்? பூபாலம் பிள்ளை வீட்டில் நீ என்னவேலை செய்கிறாய்? யாவும் கூறு" என்றான். அம்மாது நான் அவ்வீட்டுக் காரியஸ்தியாயிருக்கிறேன்; பூபாலம் பிள்ளை பிரம்மச்சாரி" என்றாள்.

ஜெயசிங் "இரவு நீ நித்திரை செய்யும்போது அப் பெண்ணினறையில் பேசும் சந்தடி கேட்டா விழித்துக் கொண்டாய்?" என்றான்.

அம்மாது "ஆம் நான் முதலில் அச்சந்தடி அடுத்த வீட்டிலிருந்து வருகிறதென்று நினைத்தேன். அங்கிருந்து அவ்வாறு சத்தம் பலதடவைகளில் கேட்டிருக்கிறேன். ஆனால் சற்று நேரத்திற்குள் அவள் அறையிலிருந்தே அச் சத்தம் வருகிறதென்று தெரிந்தது. எனக்கு மிக்க வியப்பாய் விட்டது. அவள் மிக்க நல்லவள். இந்நகரில் உள்ள பெண்கள் எல்லாரைக்காட்டிலும் நல்லவள் என்று நான் கூறுவேன். பத்திரம்! நீங்கள் யாரேனும் அவளைப்பற்றி வேறு ஏதேனும் நினைக்கப் போகிறீர்கள்!..." என்றாள்.

ஜெயசிங்:—இல்லை யில்லை. நாங்கள் ஒன்றும் கூறவில்லை. அவள் பத்தரை மாற்றுத் தங்கம் என்று கருதுவோம். அப்புறம் கூறு.

அம்மாது:—"நான் என்ன கூறினேன்? ஆ! அவள் அறையில் சந்தடிகேட்டது. நான் மிக்க வியப்படைந்து துரிதமாகச்சென்று அவள் அறையின் வாயிற்படியருகில் நின்றேன். நான் என் கதவை ஆத்திரத்தோடு திறந்த சத்தம் அங்குக் கேட்டதுபோ லிருக்கிறது. நான் அங்குச் சென்றபோது நிர்ச்சந்தடியாயிருந்தது. நான் சற்று நேரம் நின்று பிறகு கதவைத் திறக்க முயன்றேன். உள் பக்கம் தாளிடப்பட்டிருந்தது. கூப்பிட்டேன். பதிலில்லை. மறுபடி கூப்பிட்டேன். அப்போதும் அவள் கதவருகில் வந்து

அதைத்திறக்காமலே "என்ன அது?" என்றாள். நான் "இங்கு பேசும் சத்தம் கேட்டுப் பீதியடைந்து விட்டேன்" என்றேன். அவள் "பக்கத்து வீட்டிலுண்டான சந்தடியாக விருக்கும்" என்றாள். நான் சரிதான் என்று கூறிவிட்டு என் அறைக்குத் திரும்பினேன்.

அதன்பிறகு எவ்விதச் சத்தமுமில்லை. ஆனால் காலையில் அவள் அறையைத்திறந்து பார்த்தபோது அவள் இல்லை. சாளரம் திறந்து கிடந்தது. சச்சரவும் போராட்டமும் நடந்த அடையாளங்கள் எங்குமிருந்தன. நான் தவருகக் கருதவில்லையென்று எனக்கு நன்ருய்த்தெரியும். நான் இரவு அவள் அறையருகிற் சென்றபோது அங்கு மனிதர் பேசிக்கொண்டிருந்தார்கள் என்பதும், அவர்கள் அவளைக் கொண்டுபோய் விட்டார்கள் என்பதும் உண்மை" என்றாள்.

ஜெயசிங் இவற்றைக் கேட்டபோது தன் வியப்பை யடக்க அவனால் முடியவில்லை. அவன், "அப்படியாயின் அவளைச் சாளாரத்திலிருந்து கீழே போட்டுவிட்டார்களோ?" என்றான். தங்கம்மாள் என்ற அம்மாது "எங்கள் வீட்டின் கட்டிடம் வளர்த்தப்படுகிறது. கட்டிடவேலை நடந்துகொண் டிருக்கிறது. அதற்காக் கீழ்க்கட்டு வரையில் ஏணி நாட்டப்பட்டிருக்கிறது. அவ்வழியாய் அவர்கள் அவளைச் சுலபமாகக் கொண்டு போகலாம்" என்றாள்.

ஜெயசிங் "அப்படியாயினும் அப்பெண் தன் மனச் சம்மதத்தோடேயே அவர்கள்கூடச் சென்றிருக்கவேண்டும்" என்றான். தங்கம்மாள், வீதியில் அவன் தோளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு மிக்க மனத்துடிப்போடு "நான் கூறுவதை நீ நம்பமாட்டாயா? நான் கூறுகிறபடி கள்ளரோ, யாரோ, அத்துஷ்டர்கள் அவளைக் கொண்டு

போனது உண்மையாயின், அவள் ஒருபோதும் மனமொப்பிச் சென்றிருக்கவே மாட்டாள். அதனால் அவள் பிராண வேதனை யடைந்திருப்பாள். இதுவரையில் இறந்து போயிராவிடின் அதனால் அவள் இறந்தேபோவாள் என்பது நிச்சயம். நீ பேசுவது இன்னதென்று எனக்கு இப்போது விளங்கவில்லை. ஆம் நீ அவளை யொருபோதும் பார்த்ததில்லை" என்றாள்

ஜெயசிங், அச்சமயம் தாங்கள் பேசுவதைக் கண்டு வீதியில் செல்லும் ஜனங்கள் தங்களை யுற்றுக்கவனிப்பதைக் கண்டு, அவளைத் துரிதமாய் நடத்திக்கொண்டே "அப்பெண் மிக்க அழகுவாய்ந்தவளோ?" என்று கேட்டான்.

தங்கம்மாள அக்கேள்வியைக் கேட்டதே திடுக்கிட்டு விட்டாள். உடனே "எனக்குத் தெரியாது. சிலர் அவள் அழகுள்ளவள் என்று கருதாமலிருக்கலாகும். அது பார்ப்பவர்களுடைய மனநாட்டத்தைப் பொறுத்தது" என்றாள். அம்மொழிகளைக் கேட்டதே ஜெயசிங் மனதில் ஒருவித அபூர்வ உணர்ச்சி யுண்டாயிற்று. காரணம் அவனுக்கே புலப்படவில்லை. அவள் குரலும் அவள் மனதிற்குள் என்னவோ சிந்தித்துக்கொண்டே பேசுவதுபோன்ற தோற்றமும் அவன் மனதில் ஒருவிதச் சந்தேகத்தை யுண்டாக்கிவிட்டது. அதனால் அவன், எப்படியாயினும் இவள் விஷயத்தில் சற்று கண்ணேக்கமும், எச்சரிக்கையும் வைத்துக்கொண்டே யிருக்கவேண்டு" மென்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டு மேலும் அவளை நோக்கி "இச்சங்கதியைப்பற்றி போலீஸ் ஸ்டேஷனுக்கு முதலில் நீ வந்து கூறும்படியான சந்தர்ப்பம் எப்படி நேர்ந்தது? பூபாலம் பிள்ளைக்கு இதைப்பற்றி யொன்றும் தெரியாதோ ?" என்று கேட்டான்.

அவ்வாறு கேட்டதே அவள் முகம் சற்று கறுத்தது.

அவளுடைய மாதிரியில் சற்று மாறுதலுண்டாயிற்று. அவள் "பூபாலம் பிள்ளைக்கு இது தெரியும். அவர் காலைப் போசனம் அருந்தும்போது நான் அவரிடம் இதைப் பற்றிக் கூறினேன். அவர் வேலைக்காரரைப்பற்றிய விஷயங்களில் சற்றும் சிரத்தையெடுத்துக்கொள்வதில்லை. இத்தகைய விஷயங்களையெல்லாம் அவர் என் பொறுப்பிலேயே விட்டுவிடுவது வழக்கம்" என்றாள்.

ஜெயசிங்:—அப்படியாயின் நீ போலீஸ் ஸ்டேஷனுக்குச் சங்கதியறிவித்தது அவருக்குத் தெரியாதோ?

தங்கம்மாள் பீதியோடு "இல்லை யில்லை. நீங்கள் மட்டும் தயவு செய்து இதைப்பற்றி அவரிடம் கூறாமலிருக்கவேண்டும். அவர் அதை யறிய வேண்டிய அவசியமில்லை. நான் உங்களைப் பின்பக்க வழியாக வீட்டிற்குள் அழைத்துச் செல்கிறேன் பூபாலம் பிள்ளை எந்த விஷயத்திலும் தலையிடும் சுபாவமுடையவரல்ல. மேலும்———" என்றாள்.

ஜெயசிங்:—காலையில் நீ இப்பெண் காணாமற்போய்விட்டாள் என்று கூறியபோது பூபாலம் பிள்ளை யென்ன சொன்னார்? அவளுடைய பெயரென்ன?

தங்கம்மாள்:—"அவள் பெயர் இராஜாமணி. பூபாலம் பிள்ளை காலைப்போசனம் செய்து விட்டு பத்திரிகையை வாசித்துக் கொண்டிருக்கையில் நான் இதைப் பற்றிக் கூறினேன். அவர் நிமிர்ந்து நோக்கி முகத்தைச் சுளித்துக்கொண்டு 'இத்தகைய விஷயங்களைப் பற்றியெல்லாம் எனக்குத் தொந்தரை கொடாமல் நீ கவனித்துக் கொண்டுபோகவேண்டும்' என்றார்" என்று மொழிந்தாள்.

ஜெயசிங், "அதோடு நீ அச்சங்கதியை விட்டு விட்டாயோ?" வென்று கேட்டான். தங்கம்மாள் "ஆமையா; அவரிடம் மறுபடி வார்த்தையாடுவதில் பயனில்லை" என்

ருள். ஜெயசிங், பூபாலப் பிள்ளையைப் பகிரங்கவிடங் களில் பார்த்திருக்கிறவரையில் அவன் அதிகமாகப் பேசு கிறவனல்லவென்பது அவனுக்குத் தோன்றியது. இவர்கள் பூபாலப்பிள்ளை வசிக்கும் மாளிகையை நெருங்கியதே ஜெய சிங், தன் கூடவரும் நாகலிங்கத்தை அடுத்தவீட்டண்டை நிறுத்தி விட்டு ஆனந்தசிங் வரவேண்டியது அவசியமா யின் தான் சமிக்கை காட்டுவதாக அவனிடம கூறிவிட்டுத் தங்கம்மாளை நோக்கி "பூபாலப்பிள்ளைக்குத் தெரியாமல் என்னை யெப்படி உள்ளே யழைத்துச் செல்வாய்?" என்று கேட்டான்.

தங்கம்மாள் "அய்யா ! தாங்கள் பேசாமல் பின்பக் கம் இருக்கும் படிகளிலேறி என்கூட வாருங்கள் அவர் அதைக் கவனிக்கமாட்டார், பார்த்தாலும் ஒன்றுங்கேட்க மாட்டார்" என்றாள். வீட்டின் பின்புறம் சென்றதும் தங் கம்மாள் தன்னிடமிருந்த ஒரு சாவியால் அங்கிருந்த கத வைத் திறந்து ஜெசிங்கை, உள்ளே யழைத்துச் சென்றாள்.

---

## 2—வது அத்தியாயம்.

தங்கம்மாள் ஜெயசிங்கை யுடனே மூன்றாவது மாடி யின் பின் அறைக்கு அழைத்துச்சென்றாள். அவ் வீடு உள்ளே அலங்கரிக்கப்பட்டிருக்கும் மாதிரியைக்கண்டு ஜெயசிங் வியப்படைந்தான். தன் தொழில் முறைமையில் அவன் அனேகம் செல்வவந்தரின் வீடுகளுக்குட் சென்று பார்த்திருக்கிறான். ஆனால் இந்தப் புராதனப் பெருமை யுடைய வீட்டின் அலங்காரம்போல் கண்டதில்லை. ஆயி னும் அவன் காணமற்போன பெண் வசித்திருந்த அறைக் குள் சென்றதும் தன் தொழிலைத் தவிர மற்ற எல்லா விஷ யங்களையும் மறந்து விட்டான்.

இராஜாமணி என்ற பெண் போய் விட்டதைப் பற்றித் தங்கம்மாள் எப்படிக் கூறினும் அப்பெண் மறைந்து போய்விட்ட விஷயம் மட்டும் ஒரு விசேஷ சமாசாரமாகவே கருதப்படுமென்று ஜெயசிங்குக்குப் புலப்பட்டது. முதலில் அவன் அந்த அறையைக் கவனித்தான். அந்த அறை ஒரு சாதாரணமான தையல்காரி வசிக்கும் அறையாகப் புலப்படவில்லை. அறை மிக்க விசால மாகவிருந்ததோடு சுவர்கள் முழுமையும் மிக நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்டிருந்தன. அவற்றையும் அங்குள்ள சாமான்களையும் கண்ட ஜெயசிங் வியப்படைந்தான். அதைக்கண்ட தங்கம்மாள்,

“இந்த அறை யெப்போதும் தையல் வேலைக்கே யுபயோகிக்கப்பட்டு வந்தது. இராஜாமணி வந்தபோது நான் அவளுக்காக வேறொரு அறை ஆயத்தம் செய்வதைக் காட்டிலும் இதில் ஒரு படுக்கை மட்டும் அமைத்துவிட்டால் போதும் என்று கருதினேன். அவள் மிக்க நேர்த்தியான பெண்ணாதலின் இந்த அறையின் ஒழுங்கைக் கெடுக்கவில்லை” என்றாள்.

ஜெயசிங் யாவும் உற்று நோக்கினான். சில சிறு தொட்டிகளில் இரோஜாமலர்கள் வாடிக்கிடந்தன. ஒருபக்கம் மேஜை மேல் எழுது கருவிகளும், இரண்டு மூன்று புத்தகங்களும் இருந்தன. முக்கியமாக மூன்று விஷயங்கள் அவனுக்குப் புலப்பட்டன. முதலாவது, இரவு அப்பெண் படுக்கையில் சயனித்திருக்கவில்லையென்று தெரிந்தது. இரண்டாவது, அங்கிருந்த திரைச்சீலை கிழிக்கப்பட்டிருந்தாலும், நாற்காலி கீழே கவிழ்க்கப்பட்டும், அதன் கால்களில் ஒன்று உடைக்கப்பட்டுமிருந்ததாலும், ஏதோ சச்சரவு நடந்ததென்று தெரிந்தது. மூன்றாவது, அதிசயமான விஷயம்—அதாவது அறைக்குள்ளிருந்தவர்கள் அங்கிருக்

கும் சாளரத்தின் வழியாகவே வெளிச் சென்றுர்கள் என்று தெரிந்தது.

ஜெயசிங் அவற்றை வெளியிட்டு "நீங்கள் காலேயில் வந்து பார்த்தபோது அறை பூட்டப்பட்டிருந்ததோ?" என்று கேட்டதற்குத் தங்கம்மாள் "ஆம், என் அறையி லிருந்து இந்த அறைக்கு வரத் தாழ்வாரத்தின் ஓரமாய் ஒரு வழியிருக்கிறது. அவ்வழியாக நாங்கள் காலேயில் வந்தபோது கதவின் பின் ஒரு நாற்காலி முட்டுவைக்கப் பட்டிருந்தது. ஆனல் கதவை நெக்கித் தள்ளியபோது அது சுலபமாக விழுந்து விட்டது" என்றுள்.

அதன்பின் ஜெயசிங் சாளரத்தில் ஏறிப்பார்த்தான். அவ்வழியால் இரவில் சுலபமாகவே வெளிச் செல்லலா மென்பது விளங்கியது ஏனெனில் புதிதாகக் கட்டப் பட்ட கட்டிடத்தின் மேல்கூரை சாளரத்தின் மட்டத்திற் குச் சரியாகவிருந்தது. அதன்மே லிறங்கிச்சென்று புதுக் கட்டிடத்தின் ஓரத்தில் நாட்டப்பட்டிருக்கும் ஏணி வழி யாக விறங்கி வீதிக்குச் செல்லலாம்.

தங்கம்மாள் "அவள் இச்சாளர வழியாகக் கொண்டு போகப்பட்டாளென்பதை நீ நம்பவில்லேயோ?" என்றுள். ஜெயசிங் "இதைவிட மிக்க கஷ்டமான சங்கதிகள் நடந் திருக்கின்றன" என்று கூறிவிட்டுச் சாளரத்தின் வழியாய்க் கூரைமேல் இறங்கப்போனவன் திரும்பித் தங்கம்மாளே நோக்கி "அப்பெண்ணின் உடைகளில் எவையேனும் காணுமற்போயினவோ?" என்று வினவினன்.

அம்மாது துரிதமாகச் சென்று அப்பெண்ணின் உடைகள் இருக்கும் அலமாரியைச் சோதித்துப்பார்த்து "ஒன்றும் போகவில்லே. மேல்போர்வை, ஒரு சட்டை.... இன்னும்...." என்று தடுமாற்றத்தோடு நின்றுள். ஜெய

சிங், "இன்னும் என்ன?" வென்றான். அம்மாது "சில... சில சில்லறைச் சாமான்கள்" என்றாள்.

அதைக் கேட்டதே ஜெயஸிங் "சில்லறைச் சாமான்களை யெடுத்துச்செல்ல அவகாசம் இருந்தவரையில் அவள் தன் பிரியத்திற்கு அடியோடு மாறாகச் சென்றவளல்ல வென்றே கருதவேண்டும்" என்று கூறிவிட்டு வெறுப்போடு அந்த விவகாரத்தையே யடியோடு விட்டுவிட்டுச் செல்ல நினைத்தான். ஆனால் அச்சமயம் தங்கம்மாள் முகத்திலுண்டான ஒருவித மாறுதலால் நிதானித்தான். அவள் "எனக்கு அது விளங்கவில்லை. ஆயினும் அது விளங்கட்டும் விளங்காமற் போகட்டும். இந்த விஷயம் என்னமோ பிரமாதமானதே. அவளை யெப்படியேனும் கண்டுபிடித்தே தீரவேண்டும்" என்றாள்.

அவள் அவ்வளவு பிடிவாதமாய்க் கூறுவதன் காரணம் என்னவென் றறிய வேண்டும் என்று ஜெயசிங் கருதி "அப்பெண் தன் பிரியப்படி சென்றவளாயின் அவளைக் கண்டுபிடித்தே தீரவேண்டுமென்று, அவள் சுற்றமல்லாத நீ ஏன் கருதுகிறாய்? உனக்கு அவ்வளவு கவலை உண்டாவானேன்?" என்றான்.

தங்கம்மாள்:—"அவளைத் தேடிக் கண்டுபிடிப்பதால் நேரிடும் செலவையெல்லாம் நான் கொடுக்கிறேன் என்று கூறுவது போதாதா. இதற்குமேலும் அப்பெண்ணைக் கண்டுபிடிக்க வேண்டுமென்பதற்குக் காரணம் வேறு கூறவேண்டுமோ? அவள் மிக்க நல்லவள். அதனால் எனக்கு அவள்மேல் மிக்க ஆசையுண்டாயிற்று. அவள் பலவந்தமாகவே கொண்டுபோகப்பட் டிருக்கிறாள். அதனால் அவள் மிக்க மனவேதனையும் சொல்லொணா வியாகுலமுமே அடைந்திருப்பாள். இவை யாவும் நான் உணர்ந்திருப்பதால்தான் என்னிட

முள்ள பணம் முழுமையும் அவசிமாயின் இதற்காகச் செலவழித்து விடுகிறேன் என்று கூறுகிறேன்" என்றாள்.

ஜெயசிங்:—ஆயினும் தன் வீட்டிலிருந்த பெண் காணமற் போனவரையில் பூபாலப்பிள்ளை யிவ்விஷயத்தில் சிரத்தை யெடுத்துக்கொள்ள வேண்டியவரல்லவா?

தங்க:—அவர் வேலைக்காரர் விஷயத்தில் அக்கரை காட்டுவதேயில்லை யென்று முன்னமே கூறினேனே.

ஜெயசிங்:—நீ எவ்வளவுகாலமாக இவ்வீட்டி லிருந்து வருகிறாய்?

தங்க:—நான் பூபாலப் பிள்ளையின் தந்தை காலத்திலிருந்தே இருக்கிறேன்.

ஜெய:—இந்த இராஜாமணி எவ்வளவு காலமாக இருக்கிறாள்.

தங்க:—சுமார் பதினேரு மாதங்களாக இருக்கிறாள்.

ஜெய:—தென்னாட்டாளா?

தங்க:—இல்லை, மேற்குத் தேசத்தவள். அய்யா! அவள் சாதாரணமான மற்ற பெண்களைப் போன்றவளல்ல.

ஜெய:—அதென்ன நீ கூறுவது? மற்ற பெண்களைப் போலல்ல வென்றால் அவள் எந்த விஷயத்தில் விசேஷமானவள்? கல்விகற்றவளா? துரைசானி போன்றவளா? என்ன உன் அர்த்தம்?

தங்க:—"என்ன சொல்வதென்று எனக்குத் தெரியவில்லை. கல்விகற்றவள் என்பது சரியே. துரைசானி என்றால் நீ கருதுகிறபடி தடபுடலான துரைசானியல்ல. ஆனால் எங்களுக்குத் தெரியாத அனேக விஷயங்கள் அவளுக்குத் தெரிந்திருக்கின்றன. எனக்குச் சரியாகக் கூறத்தெரியவில்லை. அவளையறிந்த பெண்களைக்

கேட்டால் கூறுவார்கள். வாசிப்பதில் அவளுக்கு மிக்க பிரியம்'' என்றாள்.

ஜெயசிங் அவளை முன்னிலும் அதிகமாக உற்று நோக்கி, "இப்பெண்ணை நீ எங்கிருந்து அழைத்து வந்தாய்? இங்குவருமுன் இவள் எங்கிருந்தாள்?'' என்றான்.

தங்க:—எங்கிருந்தாளோ அது எனக்குத் தெரியாது. நான் அவளது முன் விஷயங்களைப்பற்றிக் கேட்கவேயில்லை. அவள் வேலைக்காக என்னிடம் வந்தாள். நல்ல பெண்ணென்று எனக்குப் புலப்பட்டதால் எவ்விதச் சிபாரிசுமின்றியே அவளை என்னிடம் வைத்துக் கொண்டேன்.

ஜெய:—நீ நம்பியபடியே அவள் திருப்தியாக வேலை செய்தாளோ?

தங்க:—ஆகா. பூரண திருப்தியாய்.

ஜெய:—அதிகமாக வெளியில் செல்வதுண்டோ? யாரேனும் சிநேகிதர் அதிகமாக வந்து அவளைக் கண்டு போவதுண்டோ?

தங்க:—"இல்லை. அவள் ஒருபோதும் வெளியில் சென்றதுமில்லை. ஒருவரேனும் அவளை வந்து கண்டு பேசியதுமில்லை'' என்றாள்.

இம் மொழிகளைக் கேட்டதே ஜெயசிங் கலக்கமடைந்து விட்டான் ஏனெனில் இதுகாறும் அப்பெண் தனக்கு அறிமுகமான ஆசாமிகள்கூட வேணுமென்றே சென்றாள் எனக்கருதினான், இப்போது இங்கு ஒருவரும் அவளைக் காணவரவில்லை, அவளும் வெளியில் செல்லவில்லையென்று உணர்ந்ததே ஒகோ இதில் நாம் இன்னும் அறியாதமர்மம் ஏதோ விருக்கிறது என்று அவன் மனதிற்பட்டது. அதன்மேல் அவன் அம்மாதை நோக்கி "இதைப் பற்றி இன்னும் சம்பாஷணை யிப்போது வேண்டாம்,

நான் முன்னே இப்பெண் இச்சாளரவழியாகத் தனியே சென்றுளா, யார் கூடவேனும் சென்றுளா என்பதை யறியவேண்டும்" என்று கூறிவிட்டு உடனே சாளரவழி யாய்க் கூரைமேல் சென்றான்.

ஜெயசிங் அவ்வாறு செல்லும்போது பின்வருமாறு தனக்குள் சிந்தித்துக்கொண்டே சென்றான்:—

"இவ்விவகாரத்தில் ஆனந்தசிங்கைக் கட்டாயம் அழைக்கவேண்டிய அவசியமிருக்கிறதா? இது வரையில், அப்பெண் ஒரு காதலன் உதவியோடேயோ அல்லது வேறுவித உதவியோடே தன் பிரியப்படி எங்கோ ஓடிவிட்டாள் என்பது மட்டும் தான் தெரிகிறது. அவ ளுக்குச் சொல்பக் கெடுதியேனும் சம்பவித்ததாகக் கருத எவ்வித அத்தாட்சியுமில்லை ஆகையால் போலீஸ் துப்பறி யும் இலாகா முழுமையும் கிளறிவிட வேண்டிய அவசியம் இதிலிருப்பதாகப் புலப்படவில்லை. மேலும் இன்னொரு விஷ யம்; தங்கம்மாள் இதற்காக ஏதோ பணம் செலவுசெய்யப் போகிறாள். அப்பணத்தை யனாவசியமாக ஏன் அதிகப் பங்குகள் போடவேண்டும். ஆயினும் ஆனந்தசிங் அலட்சி யம் செய்யப்படக் கூடியவனல்ல. அவன் என்னை யழைக்க வேண்டியது அவசியமென்று புலப்பட்டால் நீ யழைத் துச் செல்லும் ஆளிடம் சொல்லியனுப்பு என்று நம்மிடம் கூறியிருக்கிறான்" என்றிவ்வாறு சிந்தித்துக்கொண்டே கூரையின் ஓரத்திற் சென்றான்.

கூரையிலிருந்து கீழ் இறங்குவது கொஞ்சம் கஷ்டமே. ஆனால் இறங்கிவிட்டால் சுலபமாக வீதியில் நுழைந்து போய் விடலாம். ஒரு ஆடவன் அப்படிச் செய்யலாகும். ஆனால் ஒரு ஸ்திரீ அப்படிச் செய்வது கஷ்டம். இதைப்

பற்றிச் சிந்தித்துக் கொண்டே ஜெயசிங் அங்கிருந்து திரும்பும்போது கூரைமேல் ஒன்று கண்டான். உடனே திடுக்கிட்டுக் கலவரத்தோடு நின்று உற்று நோக்கினுன். கடைசியில் இது ஒரு கோரசம்பவமான விபரீதமாகவே முடியுமோ வென்று கருதினுன். ஏனெனில் அவன் கூரை மேல் கண்டது தோய்ந்துபோன ஒரு பெருந்துளியான இரத்தம். பிறகு சாளரத்தை நெருங்க நெருங்கப் பல இரத்தத் துளிகள் காணப்பட்டன. சாளரத்தின் மேலேயே ஒரு துளி யிருந்தது. அதன் பிறகு பாய்ந்துபோய் அறையிலிருந்த ஜமக்காளத்தில் உற்று நோக்கினுன். அங்கும் சில துளிகள் காணப்பட்டன.

ஜெயசிங் உற்றுப் பார்ப்பதைக் கண்ட தங்கம்மாள், "என்ன பார்க்கிருய்?" என்ருள். ஜெயசிங், "இதென்ன பார்!" என்று அங்கிருந்த இரத்தத் துளிகளைக் காட்டினுன். அவற்றைக் கண்டதே தங்கம்மாள் திடுக்கிட்டுப் பிரமித்து "ஓ இதென்ன? இரத்தம், இரத்தம். அந்தோ! அவர்கள் அவளைக் கொன்றுவிட்டார்கள். ஆம்..." என்று தேகம் நடுங்கிக்கொண்டே "இது அவள் இரத்தம் என்று நீ நினைக்கிருயா?" என்று கேட்டாள். ஜெயசிங் அங்குக் கீழே ஒரு துளியல்ல, பலதுளிகள் விழுந்திருக்கும் இடத்தைக் காட்டி "எல்லா காரணங்களாலும் அவ்வாறே நினைக்கவேண்டி யிருக்கிறது" என்ருன்.

அதைக் கேட்டதே யம்மாது மிக்க கலக்கமடைந்து, "இது நான் நினைத்ததைவிட விபரீதமாகவிருக்கிறது. நீ என்ன செய்யப்போகிருய்? நாம் இதற்காக என்ன செய்கிறது?" என்ருள்.

ஜெயஸிங்:—"நான் வேருெரு துப்பறியும் நிபுணரை வரவழைக்கப் போகிறேன்" என்று கூறிவிட்டுச் சாளரத்தினருகிற் சென்று நின்று "உடனே போய்

ஆனந்தசிங்கை அழைத்துவா'' என்று நாகலிங்கத்திற்குச் சமிக்கை செய்தான். அதைக்கண்ட தங்கம்மாள், "உன்னேடுகூட வந்தானே அந்த ஆளா?'' என்று கேட்டாள். ஜெயசிங் ஆம் என்று தலையசைத்தான்.

அதைக் கேட்டதே தங்கம்மாள் முகத்தில் ஒருவிதமான பிரகாசம் உண்டாயிற்று. "ஹா! மிக்க சந்தோஷம். அவர் வந்தால் ஏதேனும் செய்வார் என்பது நிச்சயம்'' என்ருள்.

அவள் மொழிகளைக் கேட்ட ஜெயசிங் மனதில் சற்று வருத்தமே யுண்டாயிற்று. ஏனெனில் அவள் கூறியமாதிரியால் "உன்னல் ஒன்றும் முடியாது'' என்று தன்னை அகௌரவப்படுத்தியதுபோல் அவனுக்குப் புலப்பட்டது. அதன் பிறகு அவன் இன்னும் தனக்குப் புலப்படாத விஷயங்கள் எவையேனுமிருக்கின்றனவாவென்று கவனிக்கத் தொடங்கினன். அப்படி யவனுக்கு முன்னமே புலப்படாதவை யதிகமாக ஒன்றுமில்லை. மறுபடி யவன் பார்த்தபோது, இராஜாமணியின் மேஜையில் கடிதங்கள் ஒன்றும் அகப்படவில்லை. எழுதாத சில கடிதங்களும், எழுதுகருவிகளும், மசிபுட்டி முதலியவையும், சிதறிக்கிடக்கும் தல் சொருகூசிகள் முதலியவைகளுமே யிருந்தன.

ஆனல், நாகலிங்கம் சென்று ஆனந்தசிங்கினிடம் சங்கதியைக் கூறியதே யவன் வந்ததுமுதல் விஷயங்களெல்லாம் வேறு விதமாகத் திரும்பிவிட்டன. ஜெயசிங் நாகலிங்கத்தின்மூலம் சங்கதியனுப்பிய அரைமணி நேரத்திற்குள் ஆனந்தசிங் அங்கு வந்து விட்டான்.

அந்தோ! வித்துவக்காய்ச்சல், வேசிக்காய்ச்சல், தொழிற்காய்ச்சல், யாவும் ஒன்றே. ஆனந்தசிங்கினிடம் ஜெயசிங்குக்கு குருபக்தியிருந்தாலும், கௌரவப்பேயும்,

பணப்பேயும் யாரை விட்டது? நித்யா நித்திய விவேக முணர்ந்த ஞானி யொருவன் தவிர மற்ற அனைவரும் அந்த மாயை மயக்கில் சிக்கியவர்களே. ஆகையால் ஆனந்தசிங்கே முடிவானசங்கதிகளைக் கண்டுபிடித்துவிட்டால் தங்கம்மாள் இதற்காகச் செலவழிப்பதாகக் கூறிய பணமனைத்தும் அவனே பெற்றுக்கொள்வானல்லவா என்று ஜெயசிங் மன முடைந்து விட்டான். அதற்குத் தகுந்தாற்போல் ஆனந்த சிங் அங்குவந்த கொஞ்ச நேரத்திற்குள் நடந்த விஷயங் கள் முழுமையும் மிக்க தெளிவாய்க் கிரகித்துக்கொண் டான்.

ஆனந்தசிங் யாவும் கேட்டுக்கொண்டதும் இராஜா மணியின் அறையில் அதிகநேரம் நிற்காமல் சட்டென்று கீழிறங்கி வந்து தங்கம்மாளை நோக்கி, "இருக்கட்டும்; அப்பெண் எப்படியிருப்பவள்? அவள் உருவம், கூந்தல், நிறம், கண், முதலியவை இத்தகையனவென்னும் விவரங் களைப்பற்றிக் கூறு" என்று கேட்டான். ஜெயசிங் அவ் விவரங்களைப்பற்றி விசாரிக்கவில்லை யாதலின் அவன் ஒரு வார்த்தையும் கூறமுடியவில்லை.

தங்க:—"எனக்கு...நான்....நான் அத்தகைய விஷயங் களைப்பற்றிக் கூறமுடியாது. ஒருவரைப் பார்த்துக் கவனித்து அடையாளங்களை யறிந்து கொள்ளும் சக்தி யெனக்கில்லை. அதற்காக இங்கிருக்கும் இன் னொரு பெண்ணைக் கூப்பிட்டு வருகிறேன்" என்று கூறி ஆனந்தசிங்காவது ஜெயசிங்காவது ஏதேனும் கூறுமுன் துரிதமாகச் சென்றாள்.

ஆனந்தசிங் அங்கிருந்த ஒரு புஷ்பத் தொட்டியி னருகிற்சென்று அதை யுற்றுநோக்கிக்கொண் டிருந்தான். சற்றுநேரத்திற்குள் தங்கம்மாள் சுறுசுறுப்பான தோற்ற மும், பிரகாசம் பொருந்திய முகமுமுடைய ஒரு பெண்ணை

யழைத்துக்கொண்டு வந்து, "இவள் பொன்னம்மாள். இராஜாமணிக்குப் போஜனம் வட்டிப்பவள் இவள்தான். ஆகையால் அவளைப்பற்றி யிவளுக்குத்தான் நன்ருகத் தெரியும்" என்று கூறிவிட்டு ஆனந்தசிங்குக்கு இரகசிய மாகச் சமிக்கைசெய்து "தங்கள் சகோதரர் புதல்வி எங் கேனும் போய் வேலைக்கு அமர்வதாகக் கூறிக் கொஞ்ச காலத்திற்குமுன் வீட்டிலிருந்து ஓடிவந்து விட்டாளாத லால் அவளைத் தாங்கள் தேடிக்கொண்டு வந்திருக்கிறீர் கள் என்ற சங்கதியை யிவளிடம் கூறித்தான் இவளை யழைத்து வந்தேன்" என்ருள்.

ஆனந்தசிங் சங்கதியின் போக்கை யறிந்துகொண்டு "சரிதான் நீ இக்கன்னிகையிடம் இச்சங்கதியைக் கூறி யழைத்து வந்தது நல்லதாயிற்று. இன்றேல் நான் அதை யெல்லாம் கூறிக்கொண்டிருக்க வேண்டும்" என்று இயம்பி விட்டு, அப்பெண்ணை நோக்கி "ஏனம்மா! இராஜாமணி என்பவள் எப்படியிருப்பாள்" என்று தான் முன்பு தங் கம்மாளைக் கேட்ட கேள்விகளையே கேட்டான்.

பொன்னம்மாள் என்ற அப்பெண் "ஓ! இராஜாமணி மிக்க அழகுவாய்ந்தவள். அவள் கூந்தல் மேகத்தினும் கறுமை வாய்ந்தது. அவள் கண்கள் அதனினும் கறுமை வாய்ந்தவை. ஆனல் அவள் தேகம் மெலிந்ததேகம்?" என்று கூறிக்கொண்டே தன் தேகத்தை நோக்கினுள்.

ஆனந்தசிங் தங்கம்மாளை நோக்கி, "இது சரிதான?" என்ருன். அவள் "ஆம் ஆம். இராஜாமணியின் தேகம் சதைப்பற்றுடையதல்ல. நான் அதைக் கவனித்திருக்கி றேன்" என்று கூறிவிட்டு எதற்காகவோ திடுக்கிட்டவள் போல் சாக்கிரதை யடைந்து பொன்னம்மாளை நோக்கி "நீ போகலாம்" என்று சமிக்கைசெய்தாள்.

ஆனல் ஆனந்தசிங் தன் சுபாவம்போல் அன்பான மாதிரியாய்ப் பொன்னம்மாளை நோக்கி இனியமொழிகளால் "சற்று இரு அம்மா! இராஜாமணியின் கண்களும் கறுப்பாக விருக்கின்றன வென்று கூறினையல்லவா. அவையுன் கூந்தலைவிட கறுமையா? "என்று வினவினன்.

பொன்னம்மாள்:-"ஆம். ஆம். என் கூந்தலைவிட கறுப்பே" என்ருள்.

ஆனந்தசிங் "ஏதோ உன் கூந்தலைப் பார்ப்போம்" என்று பார்த்துவிட்டு "மிக்க அழகாயிருக்கிறது என்று கூறித் தங்கம்மாளை நோக்கி "ஏனம்மா! உன்னிடம் வேறு பெண்கள் இருக்கிருர்களோ?" என்று கேட்டான்.

தங்கம்மாள், "இரண்டுபேர் இருக்கிருர்கள்" என்ருள். ஆனந்தசிங் அவர்கள் நிறம் எப்படி என்றதற்கு அவள், "அவர்களும் ஏறக்குறையப் பொன்னம்மாள் நிறம் போன்றவர்களே" யென்ருள். அம்மொழிகளைக்கேட்ட பின் ஆனந்தசிங் தன் கரத்தைத் தன் மார்பின்மேல் வைத்துத் தடவினன். அவன் இயற்கை நடக்கைகளை யுணர்ந்த ஜெயசிங் அவனுக்குத் தன் ஆராய்ச்சியில் ஏதோ திருப்தியுண்டா யிருக்கிறதென்று உணர்ந்தான்.

ஆனந்தசிங் "சரி, இனி வெளிக் கூடத்திற்குச் செல்வோம்" என்ருன். மறு விநாடி கதவு திறக்கப்பட்டதும் ஒரு மனிதன் உள்ளே வந்தான்.

---

## 3-வது அத்தியாயம்.

ஜெயசிங் அறைக்குள் வந்த மனிதனைக் கண்டதும் அவன்ருன் வீட்டின் எஜமானனுகிய பூபாலப் பிள்ளை யென்று தெரிந்து கொண்டான். பூபாலப்பிள்ளை வெளியில் செல்லப் புறப்பட்டவன்போல் உடையணிந்து

கொண்டு தன் தலையணியைக் கரத்தில் பிடித்துக்கொண்டு அங்கு வந்தான். அவனைக்கண்டதே இவர்கள் மௌனமாக விருந்தார்கள். தங்கம்மாள் மட்டும் மிக்க குழப்ப மடைந்தவளாகக் காணப்பட்டாள்.

பூபாலப்பிள்ளை சற்று கம்பீரமான தோற்றமும், பெருமையும், அடக்கமும் உடையவன். அவன் முகத்தில் உண்டான ஒருவித அருவருப்பான குறியைக்கண்ட ஜெய சிங், நாம் இங்கு வந்தது இவனுக்குப் பிடிக்கவில்லை" யென்றுணர்ந்து சற்று பின்னிடைந்து நின்றான். ஆனால் ஆனந்தசிங்கோ முன்னுக்குச் சென்று, "பூபாலப்பிள்ளை யவர்கள் என்று கருதுகிறேன்" என்றான்.

பூபாலப் பிள்ளை கனவிலிருந்து விழித்துக் கொண்ட வன் போல் திடுக்கிட்டு ஆனந்தசிங்கின் புன்னகை பொருந்திய வதனத்தை நோக்கிப் பொருமையோடு தலை யசைத்தான். ஆனந்தசிங் மிக்க மரியாதையோடு "நான் துப்பறியும் இலாகாவைச் சேர்ந்தவன். என் பெயர் ஆனந்தசிங் என்று பலர் கூறுவார்கள். கடந்த இரவு தங்கள் வீட்டிலிருந்து ஒரு பெண் மிக்க அபூர்வமான விதமாகக் காணமற்போனதாய் எங்களுக்குச் சமாசாரம் எட்டியது. அதற்காக நானும் என் ஆட்களில் ஒருவராகிய இவரும் இதைக் கவனிக்க இங்கு வந்தோம். இனி யிதைப்பற்றித் தங்கள் பிரியத்தை யெதிர் பார்க்கிறோம்" என்றான். பூபாலப் பிள்ளை வெறுப்புடையவன்போல் முகத்தைச் சுளித்துக்கொண்டு சுற்றிப் பார்த்து, தங்கம்மாளை யுற்று நோக்கி, "இது அப்படிப்பட்ட பிரமாதமான விவகார மென்று நீ கருதுகிறாயா?" என்று கேட்டான். தங்கம் மாள் பேசமுடியாமல் ஆம் என்று தலையசைத்தாள்.

பூபாலப்பிள்ளை யேதோ சந்தேகமுடையவன்போல் தங்கம்மாளைச் சற்று உற்றுநோக்கி, "இத்தகையப் பிரமாத

மான விவகாரங்கள் அவசியமென்று நான் நினைக்கவில்லை. அப்பெண் சந்தேகமின்றித் திரும்பிவந்து விடுவாள். அப்படி வராவிட்டால்...." என்று தன் விரற்சட்டையைக் கழற்றத் தொடங்கினன்.

ஆனந்தசிங் அவ்விரற்சட்டைகளைக் கடைக்கண்ணுல் குறிப்பாக நோக்கிக்கொண்டே "இதில் கஷ்டமென்ன வெனில் அப்பெண் தனியாய்ப்போகவில்லை. முன்னுடியே யுமது வீட்டிற்குள் நுழைந்த சிலர் உதவியாலோ அல்லது அவர்களால் பலவந்தமாகவோ கொண்டுபோகப்பட் டிருக்கிருள்" என்ருன்.

பூபாலப்பிள்ளை இப்போதும் அவ்விஷயத்தில் ஒரு சிரத்தையும் காட்டாமலே, "இது அதிசயமான சந்தர்ப்பமே. நீ கூறுவது உனக்கு நிச்சயமென்று தோன்றினல் அதைப்பற்றிக் கொஞ்சம் விசாரிக்கவேண்டியதே. துன்பமடைந்தவர்கள் விஷயத்தில் நீதி நடப்பதற்கு நான் தடை செய்யமாட்டேன். ஆனல்..." என்று தோட்களை யசைத்தான். அச்செய்கை பராமுகம் அல்லது சந்தேகத்தைக் காட்டியது.

தங்கம்மாள் நடுக்கத்தோடு ஒரு அடி முன் வந்தாள். ஜெயசிங் அவள் ஏதோ கூறப்போகிருள் என்று கருதினன். ஆனல் அவள் மறுபடி தடுமாற்றத்தோடு பின்னிடைந்து விட்டாள். ஆனந்தசிங் அதைக் கவனிக்கவில்லை. அவன் பூபாலப் பிள்ளையை நோக்கி "அய்யா! தாங்கள் என்னேடு மேல் மாடியிலுள்ள அப்பெண்ணினறைக்கு வந்தால் நான் கூறியவை வெறும் உத்தேசமல்ல வென்பதற்குச் சில அத்தாட்சிகளை நான் காட்டுகிறேன்" என்ருன்.

பூபாலப் பிள்ளை "ஒரு ருசுவும் காணுமலே நீ கூறுவதை நம்பிக்கொள்ள நான் ஆயத்தமாக விருக்கிறேன். ஆயினும் திடுக்கிடத் தக்க விஷயம் ஏதேனும் காணக்

கூடியதாக விருந்தால் உன் விருப்பின்படி செய்ய வேண்டியதே" என்று கூறிவிட்டுத் தங்கம்மாளை நோக்கி "ஏனம்மா! அப்பெண் இருந்த அறை யெது?" என்றான்.

தங்கம்மாள் "அப்பெண்ணுக்கு மூன்றாவது மாடியின் பின் பக்கமிருக்கும் அறையை நான் விட்டிருந்தேன். அது பெரிய அறை. அதில் நல்ல வெளிச்சமிருந்தது. அது தையல் வேலைக்குச் சரியானவிடம். அப்பெண்ணும் மிக்க நாணயமானவள்..." என்றதே,

பூபாலப் பிள்ளை இத்தகவல்களெல்லாம் அனாவசியம் என்று கூறுபவன்போல் கையசைத்து விட்டு வழிகாட்டு என்று படிகளிலேறினன். உடனே தங்கம்மாள் மனதில் ஒருவிதப் பீதி யுண்டாய் விட்டது. அவள் "அய்யா! தாங்கள் மேலேறிச் செல்லும் அவ்வளவு கஷ்டமெடுத்துக் கொள்ளவேண்டியது அனாவசியமென்று நினைக்கிறேன்" என்று கூறிவிட்டு ஆனந்தசிங்கை நோக்கி,

"அந்தத் திரை கிழிக்கப்பட் டிருப்பதையும், நாற்காலி கவிழ்க்கப்பட் டிருந்ததையும், சாளரம் திறக்கப்பட் டிருந்ததையும் கூறினல்..." என்றாள். அதற்குள் ஆனந்தசிங் பூபாலப் பிள்ளையை யழைத்துக்கொண்டு துரிதமாகப் படிகளிலேறிச்சென்றான். தங்கம்மாள் செய்த ஆக்ஷேபனை, கட்டாயம் பூபாலப் பிள்ளையை யழைத்துச்சென்று காட்டவே வேண்டும் என்ற தீர்மானத்தை யவன் மனதிலுண்டாக்கிவிட்டது. ஏனெனில் நாமறியாத ஏதோ மர்மம் இதிலிருக்கிறதென்று அவன் மனதிற்குப் புலப்பட்டது.

தங்கம்மாள் அடக்கமுடியாத மனக் கலக்கத்தால் ஜெயசிங் இருப்பதையும் மறந்து "அய்யோ தெய்வமே! இப்படி நேரிடுமென்று யார் எண்ணினர்கள்" என்று தனக்குத் தானே கூறிக்கொண்டு ஜெயசிங்கைத் தாண்டித் துரிதமாய் மேலே சென்றாள்; ஜெயசிங்கும் துரித

மாய்ச் சென்றான். அவன் அப்பெண்ணிருந்த அறைக்குள் நுழைந்தபோது பூபாலப்பிள்ளை அறையின் மத்தியில் நின்றுகொண்டிருக்கிறான். தங்கம்மாள் ஒரு பிரம்மாண்டமான பயங்கர உருவத்தைக் காண்பவள்போல் அவனை மிரட்சியோடு நோக்கிக் கொண்டு அறையின் ஒரு மூலையில் நின்றுகொண் டிருக்கிறாள். ஆனந்தசிங் சுறுசுறுப்போடு தான் கண்டு பிடித்த விஷயங்களை யொவ்வொன்றாகக் காட்டிக்கொண்டிருக்கிறான்.

ஆனந்தசிங் "இதோ பார்த்தீரா, அவள் பலவந்தமாகக்கொண்டுபோகப்பட்டிருக்கிறாள் என்று நன்றாகத் தெரிகிறது. தன் உடைகளை யெடுத்துக்கொண்டு போகக்கூட அவளுக்கு அவகாசமிருந்திருக்கவில்லை" என்று கூறிக்கொண்டே சட்டென்று திரும்பி அங்கிருந்த ஒரு பீரோவின் ஒரு அறையை வெளியில் இழுத்தான். உடனே படபடப்பான ஒரு சத்தம் கிளம்பியதும் தங்கம்மாள் பாய்ந்து வந்து ஆனந்தசிங்குக்கும் அந்தப் பீரோவுக்கும் இடையில் நின்றுகொண்டு "நீங்கள் பெரிய மனிதர்கள்; அப்பெண் நாணயமானவள். அப்படிப்பட்டவள் தான் அணியும் உடைகள் அன்னியர் கண்கள் முன் சோதனைக்குக் காட்டப்படுவதை விரும்புவாளா என்று சிந்தித்துப் பாருங்கள்" என்றாள்.

ஆனந்தசிங் துரிதமாய்ப் பீரோவின் அறையை மூடிவிட்டு, "அம்மா! தொழில் முறைமையில் உண்டான கடின சித்தத்தால் அவசரப்பட்டு நான் செய்த குற்றத்தை மன்னிக்கவேண்டும் நீ கூறுவது நியாயமே" என்றான். ஜெயசிங்குக்கு மட்டும் ஆனந்தசிங்கின் நடக்கையில் ஏதோ தந்திர சாமார்த்தியம் இருக்கிறதென்று மனதிற்பட்டது. தங்கம்மாள் பீரோவின் அருகில் சென்று அதன்மேல் சாய்ந்து கொண்டு பூபாலப்பிள்ளையின் மேலேயே கண்

ணுக்கம் வைத்திருந்தாள். அவளுடைய பார்வையால் அவள் ஆனந்தசிங்குக்காக பயப்படாதவள் போலவும், பூபாலப்பிள்ளையின் அத்துமீறிய நடக்கைக்கே அஞ்சுகிற வள் போலவும் புலப்பட்டாள்.

பூபாலப்பிள்ளை ஆனந்தசிங்கை நோக்கி "நான் காணக் கூடியவை யிவ்வளவேயாயின் இனிநான் என் காரியத்தைப் போய்ப் பார்க்கலாம் என்று கருதுகிறேன். இவ்விஷயம் நான் கருதியதைக் காட்டிலும் விபரீதமாகவே தோற்றுகிறது. இதைப்பற்றி யுடனே விவகாரம் நடத்த வேண்டியது அவசியமென்று உனக்குத் தோன்றினல் தடையின்றிச் செய்யலாம். நான் சாதாரணமாய் எப்போதும் வெளிப்பிரஸ்தாபங்களில் சிக்காமல் அடக்கமாகவேயிருப்பவன் என்பதைப்பற்றி நீ கவனிக்கவேண்டாம். உன் தொழிலின் கடமையை நீ செய். இந்த வீட்டைப் பற்றிய விஷயத்தில் இதை உன் சொந்த வீடாக எண்ணிக்கொள். தங்கம்மாள் உனக்கு வேண்டிய அநுகூலங்களை யெல்லாம் செய்வாள்" என்று கூறிவிட்டு உடனே தன் அறைக்குச்சென்றான்.

பூபாலப்பிள்ளை சென்றதே தங்கம்மாள் பெருமூச்சு விட்டுப் பீரோவையும் விட்டு அப்புறம் வந்தாள். மறு விநாடி ஆனந்தசிங் குனிந்து தான் முன்பு மூடிய பீரோவி னறையைத் திறந்தான். அந்த அறையின்மேல் ஒருவெள்ளைக்குட்டை முழுமையும் விரிக்கப்பட்டிருந்தது. அதன் கீழ் விலையுயர்ந்த சரிகையிழைக்கப்பட்ட ஒரு கழுத்துப் பட்டை யிருந்தது. அதோடு மிக்க சாக்கிரதையாய் மடித்து வைக்கப்பட்டிருந்த ஒரு நீலப்பட்டுடையிருந்தது. அதில் நாணயமாய்ச் செய்யப்பட்ட ஒரு பொன் ஊசி சொருகப்பட்டிருந்தது. உதிர்ந்துபோன ஒரு இரோஜா மலர்ச்செண்டும் அதிலிருந்தது.

இவற்றைக்கண்டதே ஆனந்தசிங்கும் ஜெயசிங்கும் வியப்படைந்து பின்னிடைந்து நின்றார்கள். யாவும் பார்த்துக்கொண்டிருந்த தங்கம்மாள், பூபாலப்பிள்ளை யிருக்கும் போது இருந்த கலவரமனைத்தும் போய் மிக்க நிதானத்தோடு "இவற்றைப்பற்றி நான் ஒருவிவரமும் கூறமுடியாது. இவை விலைமதிப்புள்ளவைகளாகவிருப்பினும் உண்மையில் யாவும் அப்பெண்ணின் சொந்தமே. அவள் வரும்போது இவற்றைக் கொண்டு வந்தாள். இவற்றால் நான் முன்னே கூறியபடி அவள் சாதாரணமான ஒரு தையல் தைக்கும் பெண்ணல்லவென்பதும், ஆனால் முன்பு நல்ல நிலைமையில் இருந்தவளென்பதும் நிச்சயம் என்று தெரிகின்றன." என்றாள்.

ஆனந்தசிங் அந்த உடுப்பு முதலியவற்றை மறுபடியுற்றுப்பார்த்துவிட்டு, சாக்கிரதையாய் அவற்றை அறையில் வைத்து மெதுவாக மூடிவிட்டான். இரண்டொரு நிமிடங்கள் கழித்து ஜெயசிங் பார்த்தபோது ஆனந்தசிங்கைக் காணோம். அவன் எத்திக்கில் எப்போது சென்றான் என்பது ஜெயசிங்குக்காவது தங்கம்மாளுக்காவது தெரியாது. அவர்கள் சற்றுநேரம் வரையில் அவனுக்காக எதிர்பார்த்துக்கொண்டு அங்கேயே சம்பாஷித்துக்கொண்டிருந்தார்கள்.

கடைசியில் ஜெயசிங் கீழிறங்கி வந்தபோது ஆனந்தசிங் பூபாலப்பிள்ளையின் படுக்கையறையிலிருந்து பூனைபோல் வெளியில் வருவதைக் கண்டான். ஆனந்தசிங் புன்னகையோடு தன்னை நோக்கி வருவதைக்கண்ட ஜெயசிங், அவன் முகத்திலுண்டாயிருந்த குறியால், அவனுக்குத் திருப்தியை யளிக்கத்தக்க உளவு எதுவோ அகப்பட்டிருக்கிறது என்று உணர்ந்தான்.

ஆனந்தசிங் குசுகுசுவென்று "மிக்க நேர்த்தியான

அழகு வாய்ந்த அறை. அதைச் சோதிக்க உனக்கு அவகாசமில்லாதது விசனிக்கத் தக்கதே" என்றான். ஜெயசிங் "எனக்கு அவகாசமில்லையென்று உண்மையாய் நினைக்கிறாயா?" என்றான். அச்சமயம் தன் பின்னால் வரும் தங்கம்மாள் சமீபத்தில் வருவதையறிந்து ஆனந்தசிங்கின் சமீபத்தில் சென்று நின்றான். ஆனந்தசிங் மெய்யாகவே யுனக்கவகாசமில்லை யென்றான். இவ்வாறு சம்பாஷித்துக் கொண்டே இருவரும் சமீபத்திலிருந்த முற்றத்தில் போய் நின்றார்கள்.

ஆனந்தசிங் கூறியமாதிரியால் ஜெயசிங் மனதிலுண்டான ஆவல் அடக்கமுடியாததாய்விட்டது. ஆனந்தசிங் கீழேயிருக்கும் வேலைக்காரப் பெண்களிடம் சம்பாஷித்துக் கொண்டே, இன்னொருவர் ஒருநாள் முழுமையும் பேசினாலும் அறிந்துகொள்ளமுடியாத அவ்வளவு சங்கதிகளைச் சொல்ப காலத்தில் அறிந்துகொண்டான். அச்சமயம் பார்த்து ஜெயசிங் பூபாலப்பிள்ளையின் அறைக்குள் சென்றான்.

ஜெயசிங் அந்த அறை மிக்க அழகாக அலங்கரிக்கப்பட்டிருக்குமென்று கருதினான். ஆனால் அதன் நிலைமையைக் கண்டபோது அவனுக்குண்டான வியப்பிற்கு ஓர் எல்லையில்லை. ஏனெனில் அது ஒரு வாசிக்கும் அறை அல்லது புத்தகசாலைபோலிருந்தது. அந்த அறையில் கீழே சரியான கம்பளம்கூட இல்லை. ஒரு பழைய ஜமக்காளம் மட்டுமேயிருந்தது. அதுவும் அறையின் மத்தியிலாவது நெகிடித் தீயருகிலாவது இல்லை. அறையின் ஓர் ஓரத்தில் மட்டுமேயிருந்தது. ஆனால் அங்கு சுவரில் மாட்டப்பட்டிருந்த ஓர் படத்தின் எதிரில் இருந்தது.

ஜெயசிங் அப்படத்தை யுற்று நோக்கினான். அது ஒரு ஸ்திரீயின் படம். அதன் முகத்தில் விளங்கிய குணங்

களை யுற்றுநோக்கியபோது அது பூபாலப்பிள்ளையின் சகோதரியாயிருக்குமென்று அவனுக்குத் தோன்றியது. ஜெயசிங் அப்படத்திலிருந்த உருவத்தைச் சரியாகப் பார்த்துக்கொண்டேயிருக்கையில் தங்கம்மாள் சிவந்த முகத்தோடு அருகில் வந்து நிற்பதைக்கண்டு திடுக்கிட்டான்.

அம்மாது "இது பூபாலம்பிள்ளையின் இரகசிய அறை. இதற்குள் நான் தவிர வேறு ஒருவருமே யுள்ளே வரலாகாது. எந்த வேலைக்காரரும் கூட" என்றாள்.

ஜெயசிங் இந்த அறையில் ஆனந்தசிங்கின் மனதிற்குத் திருப்தியை யுண்டாக்கியது எது வென்று ஆவலோடு பார்த்துக் கொண்டே "ஆ! மன்னிக்க வேண்டும். கதவின் சந்தில் இப்படத்தைக்கண்டு இதன் அழகைச் சரியாகப் பார்க்கலா மென்றுக் கருதி யுள்ளே வந்தேன். இது பூபாலப் பிள்ளையின் சகோதரி யென்று கருதுகிறேன்" என்றான். தங்கம்மாள் "அல்ல. அவருடைய சகோதரன் மகள்" என்று கூறிவிட்டுக் கதவை மூடிக் கொண்டாள். அந்த விஷயத்தில் ஜெயசிங் தானே உளவு கண்டறிய முயன்றது அதுதான் கடைசி.

இரண்டொரு நிமிடங்களில் ஆனந்தசிங் தாழ்வாரத்திற்கு வந்து இவர்களைச் சந்தித்தான். உடனே ஆனந்தசிங்குக்கும் தங்கம்மாளுக்கும் சம்பாஷணை தொடங்கியது. ஜெயசிங் அதை மிக்க உன்னிப்பாய்க் கவனித்தான்.

ஆனந்தசிங் தங்கம்மாளை நோக்கி "நீ இந்தப் பெண்ணை யெப்படியேனும் கண்டுபிடிக்க வேண்டுமென்று ஆவல் கொண்டிருக்கிறாய். அவ்விஷயத்தில் நேரிடும் செலவை யெல்லாம் நீ மிச்சப்படுத்தி வைத்திருக்கும் பொருளிலிருந்து கொடுக்கத் துணிந்திருக்கிறாய். உன்னிடமிருக்கும் பணத்தை யெல்லாமே யிவ்விஷயத்தில்

செலவழிக்க ஆயத்தமாக விருக்கிறாய். அல்லவா?" என்றான்.

தங்கம்மாள்:—"ஆம் அய்யா! நான் ஆயிரக்கணக்காகச் சேமித்து வைத்திருக்கவில்லை. நூற்றுக்கணக்கில் தானிருக்கும். நான் ஏழை. ஆனால் என்னிடம் இலட்சக் கணக்கான பணம் இருந்து இப்பெண்ணைக் கண்டு பிடிக்க அவற்றை யெல்லாம் செலவழிக்க வேண்டியிருந்தால் நான் கடைசிக் காசு வரையில் செலவழிக்கத் தடையேயில்லை. நியாயமாக இதற்காக எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு எடுத்துக் கொள்ளுங்கள். அப்பெண் எப்படியாயினும் கண்டு பிடிக்கப்பட வேண்டும். அதுவும் சீக்கிரத்தில்" என்று மிக்க மனத் துடிப்போடும், வியாகுலத் தோடும், ஆத்திரத்தோடும் கூறினாள்.

ஆனந்தசிங்:—பேசாமல் விட்டு விட்டால் அப்பெண் தானே வந்து விடலாகும் என்பதைச் சிந்தித்தாயா?

தங்கம்மாள் — அவளால் கூடுமானால் வந்து விடுவாளே.

ஆனந்தசிங்:—அவள் தான் இருக்குமிடத்தில் அத்தகைய திருப்தி யுடையவளாக விருந்தாள் என்று உனக்கு நம்பிக்கை யுண்டாகி யிருக்கிறதா?

தங்கம்:—"அவள் இவ்வீட்டின்மேல் பிரியமே. ஆனால் என்மேல் மிக்க பிரியம். என்மேல் அவள் வைத் திருந்த பிரியத்திற்கு அவள் பலவந்தப் படுத்தப் படாமலிருந்தால் ஒரு காலும் போயேயிராள். அவள் குணம் ஒருமாதிரி. அவளை யொருவர் கொன்றிருந் தாலும் அவள் வெளிக்குத் தெரியுமாறு கூச்சலிடுகிற வளல்ல. அவர்கள் கொன்றாலும் அவள் சத்தமிட மாட்டாள்" என்றாள்.

ஆனந்தசிங், "அவர்கள் என்று எப்படிக் கூறுகிறாய்?"

186523

என்ருன். தங்கம்மாள் "இரண்டு மூன்று பேர் பேசும் சத்தம் எனக்குக் கேட்டது" என்ருள்.

**ஆனந்தசிங்:**—இரவு பேசியவர்கள் குரலைக் கேட்டால் யாரென்று தெரிந்து கொள்வாயா?

**தங்கம்:**—முடியாது.

**ஆனந்தசிங்:**—"நான் ஏன் கேட்கிறேன் என்ருல் நான் ஒரு சங்கதி கேள்விப்பட்டேன். பூபாலப்பிள்ளை யிடம் இருக்கும் அச்சுதன் என்ற வேலைக்காரன் இப்பெண் கீழிறங்கி வரும் போதும் போகும் போதும் அதிகமாகக் கவனிக்கும் வழக்கமுண் டென்று கேள்விப்பட்டேன்" என்ருன்.

இதைக் கேட்டதே தங்கம்மாள் முகம் சிவந்து அவள் துரிதமாய் எழுந்து நின்று "நான் இதை நம்பமாட்டேன். அச்சுதன் தன் அந்தஸ்தை யறிந்து நடப்பவன். இத் தகைய சங்கதிகளை நான் செவியேற்க மாட்டேன். மேலும் இராஜாமணி அப்படிப்பட்ட...." என்பதற்குள்,

ஆனந்தசிங் "ஒரு நாய் அரசனை யுற்றுநோக்கலாம் அதனுலேயே அரசனும் நாயை உற்றுப் பார்த்தான் என்று அர்த்தமல்ல. ஆயினும் இத்தகைய சந்தர்ப்பங்களில் யாவற்றையும் சிந்திக்கவேண்டும்" என்ருன். தங்கம்மாள், "அத்தகைய சங்கதியையே நீ யொருபோதும் நினைக்கலா காது" என்ருள்.

ஆனந்தசிங் மிக்க சாந்தமாய் "அம்மா! நீ அப்பெண் விஷயத்தில் இத்தகைய அன்பு வைத்திருப்பதற்குக் கார ணம் என்ன வென்பதைச் சற்று கூறினுல் மிக்க நலமாக விருக்கும். மற்ற எல்லா விவகாரங்கள் உளவுகளைக் காட்டி லும், அப்பெண்ணின் உண்மையான பூர்வ சரித்திரம் கொஞ்சம் தெரிந்தால் இதனுண்மையைக் கண்டுபிடிக்க எவ்வளவோ அனுகூலமாக விருக்கும்" என்ருன்.